
# மந்திரிக்கப்பட்ட சொற்கள்



இமாம் அத்னான்

# மந்திரிக்கப்பட்ட சொற்கள்

இமாம் அத்னான்

யாவரும் பப்ளிஷர்ஸ்

மந்திரிக்கப்பட்ட சொற்கள்
ஆசிரியர்: இமாம் அத்னான் ©
முதல் பதிப்பு: டிசம்பர் 2018
வெளியீடு: யாவரும் பப்ளிஷர்ஸ்
தொடர்பு: 9042461472, 9841643380
editor@yaavarum.com, www.yaavarum.com
பக்கங்கள்: 88
விலை:

**Manthirikkapata sorkkal**
by Imam Adhnan ©
First Edition: Dec 2018
Published by Yaavarum Publishers
Contact: 9042461472, 9841643380
editor@yaavarum.com, www.yaavarum.com
Designed by: Harisankar
Pages: 88
Price:

## இமாம் அத்னான் (1990)

கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட இலக்கியச் செயற்பாட்டாளர். புனைவின் புதுவகைச் சாத்தியங்களைப் பரிசோதித்தல், பிரதிகள் மீதான மாறுபட்ட வாசிப்புகளை முன்னெடுத்தல், இலக்கிய கலந்துரையாடல் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல், பொதுப் போக்கினை இடையீடு செய்தல் என்பதாக இயங்கி வருபவர்.

'மொழியின் மீது சத்தியமாக' (2017) இவரது கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

இது இவரது இரண்டாவது தொகுப்பு. குறும்புனைவுகளின் தொகுதி.

சமூகப் பணியில் இளமாணிக் கற்கையை (Bachelor of Social Work) முடித்துக் கொண்டு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுடன் பணியாற்றுகிறார்.

தொடர்புக்கு: imamadhnan@gmail.com,
www.facebook.com/imam.adhnan,
+94775988509

எனது சொற்களுக்குப் பித்தேறத் துவங்கிய நாட்களில்
அவைகளைத் தணிக்கைகளற்று எறிந்து பார்க்க
மனதைத் திறந்து வைத்திருந்த

பிஸ்ரின்
ஃபஹீம்
ஸல்ஃபீர்
உபைத்

அவர்களின் பிரியத்திற்கு

புனைவுகள்

1. ஜெமோசுவின் அடையாளம்

2. ஒற்றைத் தாளில் ஆகாயம் தொடும் தொழுவங்கள்

3.

4. சூறத்துல் நானும் என் எதிர்த்தலும்

5. Always 'Yes' for Mona Lisa

6. அவளுக்கான காதல் கடிதம்

7. புனைவில் பன்மித்து மிதக்கும் மதுப்புட்டிகள்

8. அப்போதும் எஞ்சியிருக்கும் சொற்களில்
அடங்கமறுக்கும் முயல்

9. சூறத்துல் நானும் என் எதிர்த்தலும் – 02

10. அறிவிப்பாளரின் தடங்கலுக்கு வருந்துகிறோம்

11.

12. பல்பக்லி

13. ஆ. Terms and conditions of the novel

14. ஏக பிரம்மையைப் பேயோட்டுதல்

15. பெரும் கதை

16. திருமண மேடையில் பெற்றோர்கள் கைது..!
பெற்றோரை விடுவிக்கக் கோரி மாணவர்கள் போராட்டம்..!

17. மூஸாவின் கோல்கள்

18. வேண்டுவதெல்லாம்

19. நாக்கோட்டி நயத்தல்

20. ஆதிப் புனைவு

21. மூத்தம்மாவின் விரல்கள்

22. கற்களின் வழியாய்

23. பெருகிக் கொதுகொதுப்பது

24. கதகதப்பு

25. மரி எனும் இன்னொரு பெண்

26. நூலறுந்து சாத்தியமாகும் ஜாலங்கள்

27. ஜனாஸா அறிவித்தலொன்று

28. சொல்லிப் பார்த்தல்

29. வரைபடத்தில் ஒரு யுவதி

30. ஆசிரியர் வராத போது

# மந்திரிக்கப்பட்ட சொற்கள்

## 1.
## ஜெமோசுவின் அடையாளம்
## அல்லது
## மீண்டும் கத்த முடியாத ம்ம்மெஹ்ஹ்...

வறண்டு கிடந்த தனது மேய்ச்சல் நிலத்திலிருந்து கிளம்பும் முன்பே, பலவித ஒத்திகைகளை மேற்கொண்டிருந்தும், வழிநெடுகிலும் தொண்டையைச் சரி செய்து பலமுறை கத்திப் பார்த்துக் கொண்டே ஜெமோசுவை வந்தடைகிறது இந்த ஆடு. ஜெமோசு என்பது பல வளங்களையும் வசதிகளையும் கொண்ட பசுமையான பிரதேசத்தின் வாயில் பகுதி. அப்பிரதேசம் குறித்த வகை ஆடுகளுக்காக ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஜெமோசுவில், உள்நுழைய அனுமதிக்கும் இயந்திரமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உண்மையில் அவ்வியந்திரத்தை உருவாக்கியவரின் பெயர்தான் வாயில் பகுதிக்கான பெயராகியிருக்கிறது.

வந்த ஆடு இயந்திரத்தின் முன்பாக நின்று பச்சை நிற ஆளியை அழுத்தியதும்

'உங்கள் பெயரினைக் குறிப்பிடுக' ஒலி கேட்கிறது.

தாமதமின்றி 'சுஜாத்சு' வென ஆடு பதிலளிக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக யோசித்து யோசித்து, தன் கொம்பால் நிலத்தைக் குடைந்து, தனக்கென கண்டடைந்த பெயரது. ஆனால், ஏரியாவில் அதனை முண்டக்கண்ணி என்றுதான் அழைக்கிறார்கள்.

அதன் பெயரினைக் கிரகித்துக் கொண்ட இயந்திரம் சற்று நேரத்தில்

'சரி, ஏற்கப்படுகிறது' எனச் சொன்னதும் தனது கொம்பினைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொள்கிறது.

தொடர்ந்து, நீங்கள் கொண்டிருக்கும் கால்களின் எண்ணிக்கையினைத் தெரிவு செய்கவென ஒரு தொடுதிரை தோன்றுகிறது.

Option *1:* இரண்டு

option 2: மூன்று

option 3: நான்கு

மூன்றாவது ஒப்சனைத் தொட்டுவிட்டு, அடுத்த testற்காக தொண்டையை செருமிச் சரிசெய்து கொள்கிறது. ஆனால், அது எதிர்பார்த்தது போல் அடுத்த testஆக ஜெமோசு மாதிரிக் கத்திக் காட்டும் படிமுறை வேண்டப்படாமல், 'உங்களின் பின் புறத்தினைப் பயன்படுத்திக் காட்டவும்' எனக் கீழிருந்து ஒரு கோப்பை நீண்டு வருவதைப் பார்த்துத் தடுமாறிவிடுகிறது.

சில வினாடிகளிலேயே தடுமாறிய மனதைப் பிடித்து நிறுத்தி, தனது பின்புறத்தை அக்கோப்பைக்கு நேராகக் கொண்டு வந்து, முக்கத் துவங்குகிறது. கோப்பைக்குள் 12லிருந்து 15ற்குள்ளாக பிழுக்கைக் கொட்டைகளைப் பேண்டு காட்ட வேண்டும். எவ்வளவுதான் முக்கியும் முனகியும் 9 கொட்டைகளையே அதனால் பேல முடிகிறது. தரப்பட்ட அவகாசம் முடிந்ததாகக் கூறி கோப்பையை உள்ளிழுத்துக் கொண்ட இயந்திரம்,

'மன்னிக்கவும் உங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது' என பதிலளிக்க, ஆத்திரமடைகிறது ஆடு. 'டாமிட்ட்.. வட் த ஹெல்' என முன்னங்காலால் இயந்திரத்திற்கு ஒரு குத்து விடுகிறது.

அதன் தாக்குதலில் அதிர்ந்து போகும் இயந்திரம், "குற்றவாளி.. குற்றவாளி.. கைது செய்யுங்கள்" என அலற ஆரம்பிப்பதைக் கேட்டதுமே ஒரே ஓட்டமாகச் சென்று அதன் செவியில் பிடித்து இழுத்து வருகிறேன். அருகே எழுதிவைத்திருந்த புதருக்குள் இருவரும் ஒளிந்து கொள்கிறோம்.

சற்று நேரத்திற்கு நான்கைந்து பேர் சீருடையில் இயந்திரத்தைச் சுற்றிவிட்டு மறைந்ததும், அதன் செவியிலிருந்த என் பிடியினைத் தட்டிவிட்டு 'மசிரு.. சரியா சாப்பாடு கிடைச்சாத்தானே.. 15 என்ன அதுக்கு மேலயும் ஒரே முக்கல்ல பேண்டு காட்டுவன்' சொல்லியபடியே நிலத்தினை பிராண்டுகிறது. அந்த பிராண்டலில் புதரின் எழுத்துக்கள் குலைவதைப் பார்த்த ஆடு, என் பக்கமாய்த் திரும்பி என் கண்களின் வழி ஊடுருவிப் பார்க்கிறது. அப்பார்வை, இயந்திரம் கொண்டிருந்த மூன்றாவது படிமுறைக்கு என்னவானது பற்றியது.

குறித்த வகை ஆடுகளுக்கு மத்தியில் தன்னை ஒரு அய்டியலாக நிறுவிக்கொண்ட ஜெமோசு, உள்நுழைய அனுமதிக்கும் இயந்திரத்தில் மூன்றாவது படிமுறையாக voice recognitionஐ உருவாக்கி, ஒப்பிட்டுச் சரிபார்க்கும் குரலாக தனது குரலினையே set பண்ணிக்கொண்டார். பின் ஒரு முறைcheck பண்ணிப்பார்க்கலாமென இயந்திரத்தின் முன் கத்தியிருக்கிறார். 'மன்னிக்கவும், உங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது' என பதில் கேட்டு அதிர்ந்தே போனார். பல முறை கத்தியும் அவர் அனுமதிக்கப்படவில்லை. எவ்வளவுதான் முயன்றும் தான் set பண்ணிய குரலில் மீண்டும் கத்த முடியாமல் போனது. பிறகு குறிப்பிட்ட ஒரு variationக்கு voice recognitionஐ மாற்றியமைத்து, நுழைந்து கொண்டார். ஆனால், மூன்று வாரம் கழித்து எவ்வளவு கத்தியும் அவருக்கான நுழைவு மறுக்கப்படவுமே, அந்தப் படிமுறையினையே நீக்கிவிட்டார்.

இதனைக் கேட்டதில் உசாரடைந்த ஆடு, நேராக இயந்திரத்திற்குச் சென்று, வலுவாக சில குத்துக்களை விட்டு ஜெமோசு போல் கத்திக்காட்டிக் கொண்டே ஓடுகிறது.. ம்ம்மெஹ்ஹ்.. ம்ம்மெஹ்ஹ்..

•

2.

## ஒற்றைத் தாளில் ஆகாயம் தொடும் தொழுவங்கள்.

அவ்விரிந்த நிலப்பரப்பெங்கும் மாட்டுத் தொழுவங்கள். சேறு சாணி சகதி புல் பலகை என ஒரு தொழுவம் தன் கதை சொன்னால், ஒவ்வொரு தொழுவமும் சொல்ல பெரும் கதைத் தொகுப்பொன்று கிடைத்துவிடுகிறது.

மூக்கை இறுகப் பொத்திக்கொண்டு எதுவும் பட்டுவிடாமல் பரம ஜாக்கிரதையுடன் அத்தொகுப்பை வாசிக்க ஆரம்பித்தவனது தாராண்மைவாத மனம்: அநியாயம் இத்தனை பக்கங்கள். என்னிடம் கிடைத்தால் என் ஓவியங்களால் பிரகாசிக்கச் செய்திடுவேன் என முணுமுணுத்தது.

அவனது மன வேட்கையை அறிந்த மட்டில் தயாரான ஒரு குழு, தூய்மை.ஒழுங்கு.நாகரீகம்.உதவுகிறோம் போன்ற சொற்களுடன் அத்தொகுப்புக்குள் நுழைந்து அச்சொற்களைப் பிரபல்யப்படுத்த, அத்தனை மாடுகளும் தங்களின் கதைகளுடன் தொழுவங்களையும் கலைத்துவிட்டு, வரிசையாக அக்குழுவைப் பின்தொடருகின்றன. அக்கதைத் தொகுப்பை விட்டு அம்மாடுகளை வெளியே அழைத்து வந்து, ஒரு தாளைக் காட்டுகிறது அக்குழு.

அத்தாளில் ஒன்றின் மீதொன்றென செங்குத்தாக வான் நோக்கி கட்டங்களிடப்பட்டிருந்தன. அவைகள் தான் மாபிள் பதித்த தூய்மையான அழகிய தொழுவங்கள் . மாடுகள் ஒவ்வொன்றும் தங்களின் தொழுவங்களை நோக்கி ஏற ஆரம்பித்தன. ஒடுங்கிய கோடுகளினூடாக கொழுத்த மாடுகள் ஏறிக்கொள்ள அவதிப்படுவதைப் பார்த்த அக்குழு, முன்னாயத்தமாய் தங்கள் வசம் விற்பனைக்கென உற்பத்தி செய்து வைத்திருக்கும் மெலிவதற்கான மருந்து வகைகளை அவைகளுக்குப் பரிந்துரை செய்துவிடுகிறது.

3.

Development. இச்சொல்லைக் கூர்ந்து கவனிக்க, கேட்டுவிடுகிறது அதற்குள் நிறைந்திருக்கும் உயர்ரக சூக்களின் சப்தங்கள். அங்கிருந்த சில சூக்கள் எம்பி மலையடிவாரத்திற்குக் குதித்த அதிர்வில் உடைந்து சரிகிறது அம்மலையின் ஒரு பாளம்.

அது குருவி மலை.

அரிதான பழங்குருவிகள் தம் குஞ்சு கூரானிகளுடன் கூடு கட்டி வாழுமிடம். கூடு கலைத்து நகர மனமின்றி தள்ளித் தள்ளி குந்திக் கொள்கின்றன

இடிந்த பாறைகளுடன் அள்ளிச் செல்லப்படும் தங்களின் ஒடிந்த சிறகுகளை ஏங்கியபடி.

அன்று கூடிய குருவிகள் வீதிக்கு வந்து கீச்சிட

அக்கீச் சொலிகள் தன்னை மாசுபடுத்துவதாய் (sound pollution)

கதைகள் பல புனையத் துவங்கின நகர்புறக் காற்று.

புனையப்பட்ட கதைகள் தங்களைத் தக்கவைத்துக் கொள்ள குருவிகளை ராட்சத நச்சுயிர்களாக பரிணமிக்கச் செய்து விடுகின்றன.

இப்போது அக்கதைகளின் ஓரமாய்த் திறந்திருக்கும் துவாரங்களைக் காண்பிக்கிறேன். அதனூடே கதைகளுக்குள் புகுந்து கொள்கிறீர்கள். இனி நீங்கள்தான் புனைய வேண்டும்.

4.

## சூறத்துல் நானும் என் எதிர்த்தலும்

முதுகு குப்பற விழ நேர்ந்து புரண்டு கொள்ள அவதிப்படும் வண்டொன்றின் பெயரால் ஆரம்பிக்கிறேன் 0 நிறமூர்த்தங்களின் மீது சத்தியமாக 0 எனது உருவம் நிறம் குறி சாயல் ரத்தவகுப்பு பரம்பரையான நோய்மை மற்றும் குறைமை முதலிய உடலியல் சார் நிலை நேர்வுகளை நானாக உவந்து பெற்றுக் கொள்ளவில்லை 0இதனை நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்களா 0 மேலும் அவர்கள்மீது சாபமுண்டாகட்டும் 0 யார் இவ்வுடலியல் நிலைகள் சார்ந்து இழிவுபடுத்தி விரோதம் பாராட்டுகிறார்களோ அவர்கள் மீதும் 0அவர்களை இவ்வாறு செய்யத்தூண்டிய அவர்களின் உடலியல்சார் நிலைமைகள் மீதும் 0 இன்னும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள் 0ஒவ்வொரு உயிரியும் தனக்கென்ற பிரத்தியேகமான ஆற்றல்களுடன்தான் ஜனிக்கின்றன 0 எங்களுக்கிருக்கும் தனித்துவங்கள் உங்களுக்கில்லை 0 உங்களுக்கிருக்கும் தனித்துவங்கள் எங்களுக்கில்லை 0 நாங்கள் சிறுமையுமல்ல நீங்கள் உன்னதங்களுமல்ல 0உங்களின் வாழ்வியல் முறைமைகள் உங்களுக்கு0 எங்களின் வாழ்வியல் முறைமைகள் எங்களுக்கு 0 புனிதங்களைக் கட்டமைத்துவிட்டு அதனை வழிபடுபவர்களை நீங்கள் கவனித்துப் பார்க்கவில்லையா 0 அவர்கள்தான் அதிகாரங்களை உற்பத்தி செய்கிறவர்கள் 0இன்னும் அவர்கள்தான் மாற்றங்களைக் கருக்கலைப்புச் செய்து வளர்ச்சியை வேரறுத்துக் கொண்டிருப்பவர்கள் 0 அவர்களால் மனித சமுதாயத்துக்கும் ஏனைய பிரபஞ்சித்திருப்பவைகளுக்கும் கேடுதான் 0மேலும் இவர்கள்தான் நம் சமூகம் சந்தித்த அத்தனை உயிர்ச் சேதாரங்களுக்கும் வாழ்தலின் மீதான நம்பிக்கை இழத்தலுக்கும் மூலகாரணம் 0 எல்லாம் விதிப்படி நடக்குமென்று சோம்பிக் கிடப்பவர்களையும் பாருங்கள் 0 அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களா விண்ணிலிருந்து ஒருவர் அமானுஸ்ய சக்திகளுடன் குதித்து வந்து அநீதி அட்டூளியங்கள் அத்தனையையும் சப்பழிந்து போகச் செய்வாரென்று 0 நிச்சயமாக நிலமை அவ்வாறில்லை 0 இவர்களுக்கு ஆடு மாடு பூச்சியினங்களுக்கு இருக்கும் சரக்குக் கூட இருப்பதில்லை 0 உண்மயில் அவர்கள்

அவைகளை விடவும் எவ்வளவோ கேவலமானவர்கள் 0 சிந்திக்கும் இயல்பு கொண்டவர்களே..! அறிவிலிகளுக்கும் கூட நிச்சயமாக இவ்வரிகளில் அத்தாட்ச்சிகளும் படிப்பினைகளும் விரவிக்கிடக்கின்றன 0

5.

Always 'Yes' for Mona Lisa

Imamadhnan <imamadhnan@gmail.com>

Jun 21, 2016, 09.58 PM ☆ To monalisa ▽

அன்பின் மோனாலிசா,

உங்களின் ஈமெய்ல் கிடைத்தது. நீங்கள் என்னிடம் உதவி கேட்டமைக்கு இதனை எனது புத்தகத்தில் பகிர்ந்து கொள்வேன் என்பதும் ஒரு காரணமென ஊகிக்க முடிகிறது. ஓவியக் கண்காட்சிக்கு திரள்திரளாக பார்வையாளர்கள் படையெடுத்த செய்தி கேள்விப்பட்ட பொழுதே, அன்று கடும் புளுக்கமாய்த்தான் இருந்திருக்கும் என்பது திண்ணம். அதுவும் வியர்த்ததில் உள்ளாடைகள் கடிக்கத்துவங்க, களைந்து துவைத்தே விட்டீர்கள் என எழுதியதைப் பார்க்கும் பொழுது, எவ்வளவு அவஸ்தைப் பட்டிருப்பீர்கள் என்பது புரிகிறது. அன்று முழுக்க ஓவியத்தில் சிரித்துக்கொண்டேதான் இருந்தீர்களா என ஒரு கணம் கேட்கத் தோன்றுகிறது.

துவைத்த உள்ளாடைகளைக் காயப் போடுவதற்குப் பாதுகாப்பான இடத்தில் கொடியொன்றை கட்டித்தர முடியுமாவெனக் கேட்டிருந்தீர்கள். என் வீட்டுத் தூணிலிருந்து தங்கையின் வரலாற்றுப் புத்தகத்தில் விறைப்புடன் நின்றுகொண்டிருந்த 2ஆம் இராஜசிங்கனின் செங்கோல் முனைக்குக் கயிற்றினைக் கட்டியிருக்கிறேன். வந்து தைரியமாக காயப் போடலாம். குறிப்பாக உள்ளாடைகளை யாரும் களவாடாமல் அவரே பார்த்துக்கொள்வார். ஒரு புன்னகை செய்தால் போதும்.

உங்களின் வரவை எதிர்பார்க்கும்

உங்களின் நேசன்.

Reply Forward

6.

## அவளுக்கான காதல் கடிதம்

அறையில் கிடந்த கண்ணாடி மேசையில் இரு புகைப்படங்கள். ஒன்றில் ராட்சதக் கடலலை உருவாக்கும் உருளை வடிவத்திற்குள்ளிருந்து surf செய்து கொண்டு வெளிவரும் ஒருத்தர் தெரிகிறார். கடலின் நீலமும் உருளும் அலைகளும் அவைகள் உருவாக்கும் வெண்நுரைகளும் என் மனதுக்கு நெருக்கமானவைகள். கடல்கன்னிகளால் நிறைந்தது என் மனம்.

புரண்டு கிடந்த மற்றைய புகைப்படத்தினைத் திருப்பியதும், திடுமென அதற்குள் நின்றுகொண்டிருந்த மலையின் உச்சிக்கே சென்றுவிடுகிறேன். ஒன்றின் மீதொன்றென செங்குத்தாக அடுக்கப்பட்ட பாறைகளால் உருவான அம்மலை மீதிருந்து எட்டிப் பார்க்கிறேன். அதனடியில் ஆங்காங்கு புதர்களும் சுற்றிலும் புதிராய்க் கிடக்கும் வளைகோடுகளும் தென்படுகின்றன. அம்மலையிலிருந்து இறங்கியாக வேண்டும். யோசித்துக் கொண்டிருந்ததில் பின் பக்கட்டில் மடித்து வைத்திருந்த கடிதம் நினைவுக்கு வருகிறது. அது அவளுக்காக எழுதிய காதல் கடிதம். இருவரும் இன்னும் நெருங்கிய நண்பர்களே. இதுவரை காதலிப்பதைச் சொல்லவில்லை.

சொற்கள் அபாரமானவை. அவற்றைக் கொண்டு எதுவும் செய்து காட்டலாம். கடிதத்திலிருந்த சொற்களை ஒவ்வொன்றாகக் கோர்த்துக் கயிறாக மாற்றிக் கொண்டு, மலையிலிருந்து கீழே இறங்குகிறேன். தரையில் கால் படும் முன்பே ஒரு எழுத்தின் வளைவில் கை வழுக்கி விழுந்தும் விடுகிறேன். சில எழுத்துக்களை நான் அதிகம் வளைத்து எழுதுவதன் விபரீதம் இப்பொழுதுதான் புரிகிறது.

காலிலிருந்து இரத்தம் கசிவதைப் பார்த்த பிறகுதான் வலி எடுக்கிறது. விழுந்ததில் கல்லில் அடிபட்டிருக்க வேண்டும். அணிந்திருந்த சட்டையில் ஒரு துண்டைக் கிழித்து, கசியும் பகுதியில் இறுகக்கட்டி, காலுக்கு ஆறுதல் சொல்லும் பொழுதுதான் அவதானிக்கிறேன். கசிந்த இரத்தம் வளைந்தும் நெழிந்தும் ஆறாய் ஒடிக்கொண்டிருக்கிறது. உடனே கடல்கன்னியாக உருமாறி அவ்வாற்றில் குதித்து, அது போகும் திசையில் நீந்தத் துவங்குகிறேன்.

எனக்குத் தெரியும் ஆறோடிக் கடலைச் சேருமென்று. எப்படியும் அருகிலிருந்த புகைப்படத்திற்குள் வந்து சேர்ந்து விடலாம்.

நீந்தி முன்னேறுவதில் அதிகம் அக்கறை காட்டிக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து, யாரோ அறைக்கதவைத் தட்டுகிறார். அவசரமாக நினைவைக் கலைத்து என் உருவுக்குமாறி கிழிந்திருந்த சட்டையையும் காலையும் சரிசெய்தும், ஓடிக்கொண்டிருந்த இரத்தத்தையும் துடைத்துவிட்டெழுந்து கதவைத் திறக்கிறேன். அவள்தான். என்னிடம் ஏதேதோ சொல்லிக் கொண்டு புகைப்படங்களை நெருங்கியவள், மலையுச்சியிலிருந்து கையிறாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சொற்களை வாசித்துப் பார்த்ததும் என் பக்கமாகத் திரும்பிக் கேட்கிறாள், யாருக்காக அதனை எழுதி இப்படித் தொங்கவிட்டிருக்கிறேன் என.

7.

## புனைவில் பன்மித்து மிதக்கும் மதுப்புட்டிகள்

உங்கள் விருப்பம் போல் நீளக்கூடிய சுருக்கிடப்பட்ட கயிறு இதோ.வைத்துக் கொள்ளுங்கள்.

ஒற்றைக் கதையாடல்களால் மய்யத்தில் குவிந்து, உன்னதமாய்ப் பிரவாகமெடுக்கிறது க்ரோபல் brand மதுப்புட்டி. அதுதான் சுவையின் உச்சமாம். அறையில் சொட்டிக் கிடக்கும் க்ரோபல் துளிகளைச் சுற்றி ஈக்கள் மோகித்து மொய்க்கின்றன. சிலதுகளுக்கு அதன் சுவையும் மணமும் சலிப்பை ஏற்படுத்தி இருந்தாலும், இன்னும் அதனுடன் இணைப்பை ஏற்படுத்தி வைத்திருப்பதற்கு: அது சுவையின் உச்சம் உச்சமென நக்கிப்பார்த்து சொல்பவர்கள், க்ரோபலிகள் என அழைக்கப்பட்டதும் க்ரோபலிகளே உன்னத ரசனைக்காரர்களென பரவல் செய்யப்பட்டிருந்தமையும்தான் காரணம்.

மற்றைய அறைகளிலிருந்து க்ரோபல் சொட்டும் அறைக்குள் நுழைந்து, தாங்களும் க்ரோபலியாக நினைக்கிறார்களா..? அப்படியாயின் அவர்கள் க்ரோபல் க்ரோபல் என்று ஜெபிக்க வேண்டும். பிரபல்யமான க்ரோபலிகளைப் புகழ்ந்து எழுதிக்காட்ட வேண்டும். அல்லது தெரிந்த சொந்தக்காரர்கள் யாராவது உள்ளே க்ரோபலியாக இருந்தால் காரியம் இன்னும் சுலபமாகிவிடுகிறது.

ஒற்றைக் கதையாடல்கள் சுற்றிலும் மௌனங்களை உற்பத்தி செய்கிறது. தன்னை போதையில் ஜெபிக்கும் பக்தர்களையே உற்பத்தி செய்கின்றன.

தொங்கல் அறையொன்றில் நீங்கள் நீர் அருந்திக் கொண்டிருக்கும் பொழுது, க்ரோபலை மொய்த்த போதையில் வந்த கொசுக்கள் உங்களைப் பரிகசிக்கத் துவங்க, இப்பிரதியில் உங்களையும் ஈ ஒன்றாய் இயங்கவைத்திருப்பதை அறிந்துவிடுகிறீர்கள். ஆம் நீங்கள் முக்கியமாய் இயங்க வேண்டிய நேரமிது. வைத்திருக்கும் கையிற்றினை இப்பிரதியின் தலைப்புக்குள் வீசி, சிக்கும் மதுப்புட்டிகளை ஒவ்வொன்றாய் இழுத்து விடுங்கள். வீழ்ந்துடைந்து அறைகளின் தரையெங்கும் சிதறிப் பரவட்டும் பன்மையின் சுவைகள். எழும் சப்தங்கள் மௌனம் கலைக்கலாம்.

8.

(இந்த அடைப்புக் குறிக்குள் இருப்பதை வாசிக்க நேர்பவர் திடுமென வழுக்கி இறுதி வரிக்குள் வீழ்ந்து மேலெழக் கூடும்)

அப்போதும் எஞ்சியிருக்கும்
சொற்களில் அடங்க மறுக்கும் முயல்.

அதோ குன்றின் விளிம்பில் அசைகின்றனவே என்னது எனவும் கேட்கிறாள்.
எழுதியதை வாசிக்கும் பொழுது, வேறொரு குன்றைப் பார்ப்பதாய் இருக்கிறதெனச் சொல்கிறாள்.
அவைகளைப் பின்தொடரும் என் பிரஞ்ஞையை கலைக்கிறாள்.
அம்முத்தம் செய்த சப்தத்தில் முயலுக்குக் கிடைத்த அப்புது உறுப்பு பலதுமாகப் பிரிந்து நத்தைகளாய் மாறி நகர்கின்றன.
அந்த மகிழ்ச்சியில் குன்றினை மனதால் தழுவி முத்தமிடுகிறேன்.
வாசித்துக் கொண்டிருந்தவளிடமிருந்து பிரதியை வாங்கி எறும்புகளின் செயல் விளைவையும் இணைத்துவிடுகிறேன்.
இரு எறும்புகள் எதையோ ஆளுக்கொரு பக்கமாய்ப் பிடித்துத் தூக்கி வந்து குன்றின் உச்சியை அடைய, சூரிய ஒளி பட்டு அவைகளின் கைகளில் இருந்தது முயலின் இன்னொரு உறுப்பென ஆகிவிடுகிறது.
அவளைத் தொந்தரவு செய்யாமல் மீண்டும் குன்றையே நோட்டமிடுகிறேன்.
சொற்களை நெருங்கிச் சென்று பிரதிக்குள் உருப்பெறும் குன்றைத் தடவிப் பார்க்கிறாள்.
பல மணி நேரம் சுற்றிப் பார்த்துக் குறிப்புகள் எடுத்து அக்குன்றினைப் பற்றிய துல்லிய விபரிப்புடன் எழுதி அவளிடம் தருகிறேன்.
அய்யோ, முயல்தான். அதைப் போலவே பாய்கிறதே என்கிறாள்.
அது எம்பி இன்னுமொரு மலைக்குத் தாவிக் குந்த
முதற் பார்வையிலேயே முயல் மாதிரி என மனம் சொல்லும் படியான மலைக் குன்று.
குறிஞ்சி நிலத்துச் சொல் வெளிக்குள் அவளை ஒருவாறாக அழைத்து வந்திருக்கன்.

9.

## சூறத்துல் நானும் என் எதிர்த்தலும் – 2

புனிதங்களாக மாற்றப்பட்டிருக்கும் மதிப்பீடுகள் மீதான எதிர்ப்பின் பெயரால் ஆரம்பிக்கிறேன் 0 மொழியின் மீது சத்தியமாக 0 நிச்சயமாக அவர்கள் ஒருவருக்கொருவர் சர்ச்சித்துக் கொள்கின்றனர் 0 இடப்பட்டிருக்கும் சிந்திப்பின் எல்லைகள் மீறப்படுவது பற்றி 0 உனது செயற்பாடுகள் அவர்களை மிகவும் சஞ்சலப்படுத்தி இருக்கிறது 0 அவ்வாறல்ல..! அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள் 0 அப்படி உன்னால் உறுதியாக சொல்ல முடிவதில்லை 0 பின் அவ்வாறல்ல..! அவர்களுக்கு அறியப்படுத்தவே எத்தனிக்கிறாய் 0 பேணிவரும் பழம்பெரும் புனிதங்கள் உன்னால் தகர்க்கப்படுவது குறித்த கவலைகள் அவர்களிடம் 0 அவர்களளோ மற்றமைகள் மீது தாங்கள் செய்து கொண்டிருக்கும் அக்கிரமங்களை பொருட்படுத்துவதாய் இல்லையே 0 பறவையொன்றின் கற்பனை வலிமையால் அகண்ட மரமாக மாறியிருந்தாய் 0 உன்னிடம் எறும்பு வண்டு பூச்சிகளின் வருகையால் பன்மைகளின் இருப்புடன் இணைந்த ஒருலகென்ற உணர்வு ஆழப்பதிந்திருக்கிறது 0 பின் அவர்களைக் கவனித்தாயா 0 பறவையின் கற்பனை எப்படி அவர்களிடம் சந்தேகத்தைக் கிளறிவிடுகின்றன என்று 0 அவர்களிடம் தெரிவித்து விடுங்கள் காலம் காலமாக மற்றைய உயிரிகளிடத்தில் திணிக்கப்பட்டிருக்கும் மனித மதிப்பீடுகளை சிதைத்துப் பார்ப்பதன் அவசியம் பற்றி 0 இவர்கள் ஹுத்ஹுத் பறவையின் ஆலோசனைச் சம்பவத்தை பார்க்கவில்லையா 0 சுலைமான் கடந்த பள்ளத்தாக்கில் எறும்புகள் பேசுவதை கவனிக்க வேண்டாமா 0 இன்னும் ஆசானாகத் தொழிற்பட்ட காகத்தைப் பற்றி இவர்கள் மறந்து விட்டார்களா 0 மேலும் இந்த வானத்தில் மிதந்தலையும்படி செய்திருக்கும் புறக்கள் கணம் தோறும் செழித்துப் பெருகுவது பற்றி அவர்கள் குழப்பத்துடன் வினவுகிறார்கள் 0 அவர்களிடம் சொல்லுங்கள் இந்தப் பிரதியை வடிவமைப்பைவனால் அதற்குள் எதையும் நிகழ்த்திக் காட்டமுடியுமென்று 0 ஓ மூஸா..! உனது தடியை வீசி பாம்பாக மாற்றிக்காட்ட வில்லையா 0 மரியமின் மகனே..! உன் கைபட்டு சிலைகள் உயிர்பெற்றுப் பறக்கவில்லையா 0 இன்னும் அவர்களிடம் சொல்லிவிடுங்கள் அவர்கள் வசிக்கும் இந்தப் பூமிப்பந்தும் வானத்தில்தான் மிதந்து கொண்டிருக்கிறது 0

## 10.
## அறிவிப்பாளரின் தடங்கலுக்கு வருந்துகிறோம்

SIG MAX மற்றும் SIG JIM கைத்தொழில் நிறுவனங்களின் அனுசரணையுடன் போட்டிகள் வெகு சுவாரஸ்யமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.. ஆம், இதோ.. இரண்டாவது போட்டியாளர்.. கண்களும் காதும் இறுகக் கட்டப்பட்ட நிலையில் களத்தின் நுழைவாயிலை நோக்கி, அதாவது புராதன கதைப்பிரதியின் தலைப்பினை நோக்கி அழைத்துவரப்படுகிறார். பார்வையாளர்கள் உற்சாகத்துடன் கைதட்டி ஆராவாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தருணத்தில் பார்வையாளர்களுக்கு ஒரு தகவலைத் தெரியப்படுத்தும்படி, இப்போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். அதாவது, இந்தப் புராதன கதைப் பிரதியை குகையொன்றின் இடிபாடுகளுக்கு இடையிலிருந்து திரு. மோசிகன் மாஸ்டர் அவர்களே கண்டெடுத்துப் பொதுவெளிக்குக் கொண்டு வந்ததுமல்லாமல், அதனைக் கொண்டு இப்படியான ஒரு போட்டியை நடாத்தலாமென முன்மொழிந்திருக்கிறார். அவருக்கு ஏற்பாட்டாளர்கள் பணிவோடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

பார்வையாளர்களின் கவனத்திற்கு.. புராதன கதைப்பிரதியைச் சூழ்ந்திருக்கும் நீங்கள், பிரதியின் எல்லைக்கு வெளியிலிருந்து போட்டியைக் கண்டுகளிக்கும்படியும் தயவு செய்து பிரதியின் எல்லைக்குள் நுழைய வேண்டாமெனவும் ஏற்பாட்டாளர்கள் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

இதோ.. தலைப்பினை எட்டிக் கடந்த போட்டியாளர் கதைக்குள் பரம ஜாக்கிரதையாக முன்னேறிக் கொண்டிருக்கிறார். இத்தருணத்தில், மீண்டுமொரு முறை போட்டியின் விதிமுறைகளை நினைவு படுத்துகிறோம்..

*1.* கண்களும் காதும் கட்டப்பட்ட நிலையில் கதைக்குள் நுழையும் போட்டியாளர் எச்சந்தர்ப்பத்திலும் கீழே விழாமல் கதையைக் கடந்து வெளியேற வேண்டும்.

2. உள்ளே உறைந்து கிடக்கும் கதாமனிதர்களை எக்காரணங்களைக் கொண்டும் தொட்டு விடக்கூடாது.

3. பாசிபூத்துக்கிடக்கும் குளத்தையொட்டி சிறிய பாறை இருக்கிறது. அதன் மீதேறி மூன்று முறை துள்ள வேண்டும். பின் அப்பாறையில் இருந்தவாறே கதையின் இறுதி வரிக்குள் தாவி வெளியேற வேண்டும்.

போட்டியாளர் தடுமாறிச் சென்று கொண்டிருக்கும் திசைவழியே முன்னோக்கிப் பார்த்தோமானால்.. கிணற்றிற்காக வெட்டப்பட்டிருக்கும் குழி தென்படுகிறது. அதற்குள் அவர் விழுவாரா? மாட்டா..........................................

◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉

எதிர்பாராத விதமாக மின்சாரம் தடைப்பட, அறிவிப்பாளர் மேடையிலிருந்த நண்பரிடம் அந்த சந்தேகத்தினைக் கேட்கிறார். நண்பரும் அவரை அருகே அழைத்துச் சொல்கிறார்: மூன்றுமுறை குதிக்க வேண்டிய அப்பாறை வெறும் பாறையல்ல. அது 'சிக்கோம்' இனத்தவர்களின் புராதன மொழியைக் கொண்ட கல்வெட்டு. சிறிது நாட்களுக்கு முன், சிக்கோமிகளுடன் அடிக்கடி மல்லுக்கட்டும் 'மல்காமி' இனத்தவர்களின் ஒரு கல்வெட்டுப் பாறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 8 அடி உயரமான அப்பாறையினது மூன்றில் இரண்டு பகுதி புதைந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அதன் 3 அடிக்கும் குறைவான பகுதியே வெளியே தெரிந்திருக்கிறது. எவ்வளவு ஆழத்திற்கு புதைந்திருக்கிறது என்பதைக் கொண்டும் புராதனப் பொருட்களினது வரலாற்றின் ஆழம் கணிக்கப்படுகிறதாம். போட்டி நிகழும் கதைக்குள் புதைந்திருக்கும் அப்பாறையின் 4 அடியளவு வெளியே தெரிகிறது. அதனால் தான் அதன் மீது மூன்று முறை துள்ளும் ஏற்பாடு. இப்போட்டிக்கு அனுசரணை வழங்கிக் கொண்டிருப்பதும் சிக்கோம் இனத்தவர்களின் நிறுவனங்கள்தான்.

நண்பர் கூறியதைக் கேட்ட அறிவிப்பாளர், புதைய வேண்டும் என்பதற்காகவா துள்ள வைக்கிறார்கள் என உச்சுக் கொட்டித் திரும்புகிறார். பின் மீண்டும் நண்பரின் பக்கம் திரும்பி, "அது சரி, புதைந்திருக்கும் அளவை வைத்துத் தானே கணிக்கிறார்கள். ஆனால், இவர்கள் செய்வதிலும் அதற்காக பொதுத்தளத்தில் இப்படியான

போட்டியை நடாத்த முன்வந்ததிலும் எங்கோ லொஜிக் இடிக்கிறதே'' எனக் கேட்கும் சமயம் மின்சாரம் வந்துவிடுகிறது.

◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉ ◉◉

ஹலோ.. ஹலோ.. மைக் டெஸ்ட் 1.. 2.. 3.. மின்சாரத் தடங்கலுக்கு வருந்துகிறோம்.

ஆம், இப்பொழுது போட்டியாளர் குறித்த பாறையைத் தேடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பார்வையாளர்கள் போட்டியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

போட்டியாளர் பாதை மாறிச் சென்று தடக்கி விழுகிறார். அவரின் தலையில் அடிபட்டு இரத்தம் வழிவதாகத் தெரிகிறது. முதலுதவிக்குழு கதையின் ஏழாம் பந்திக்குள் விரைந்து சென்று அடிபட்டவருக்கான சிகிச்சையை வழங்கிக் கொண்டிருக்கிறது. விழுந்தவரின் தலை ஏதாவது கல்லில் பட்டிருக்கக் கூடும்.. ஆம், முதலுதவிக்குழு அது கல்லல்ல; முழுதும் புதைந்திருக்கும் பெரிய பாறையென அறியத்தருகிறது. அது என்ன வகையான பாறையாக இருக்கும்? வேறு ஏதாவதொரு இனத்தின் கல்வெட்டாக இருக்குமா?.. இப்புராதன கதைப்பிரதிக்குள் இப்படியான பல பாறைகள் புதைந்து கிடக்கும் போல் தெரி.............................................................................................. மன்னிக்க வேண்டும், புதைந்து கிடப்பது வெறும் பாறைதான் எனவும் வேறெந்தப் பாறைகளும் கதைக்குள் புதைந்தில்லை எனவும் ஏற்பாட்டாளர்கள் அறியத்தருகின்றனர். குளிர்பானம் அருந்த அவர்கள் அழைப்பதால், தொடர்ந்தும் அறிவிப்பைத் தர மைக்கினை நண்..........................

மன்னிக்கவும். அறிவிப்பாளரின் தடங்கலுக்கு வருந்துகிறோம்.

*11.*

தான் கண்டெடுத்த நிலவொன்றைத் தூக்கி வந்து வானத்தில் வைத்த கழுகு அதனைக்காட்டித் தன் குஞ்சுகளை உறங்க வைக்கிறது.

மனிதர்களுக்கோ அந்நிலவொளியில் காமம் புரிவது அலாதியான இன்பமாய் மாறிவிடுகிறது. அவர்களுக்குக் குளிர் தேவைப்பட்ட பொழுதொன்றில் குளிர்சாதனப் பெட்டியைக் கண்டுபிடித்ததும் அப்பெட்டியினுள் நிலவொளியைப் பிரதிபண்ணி மின்குமிழில் ஒளிரவைத்து நெடுங்காலமாய் அங்கேயே காமம் புரிகிறார்கள்.

அப்பெட்டியிலிருந்து வெளியான CFC நிலவை உருக்கி ஆவியாய் மறையச் செய்ததினால், தூங்கமுடியாமல் விழித்திருந்தே இரு குஞ்சுகள் இறந்துவிட, எஞ்சிய குஞ்சுகளைக் காப்பாற்ற நிலாப்பாடல்களை இசைத்து, அவைகளை உறங்கவைக்க சிரமம் கொள்கிறது கழுகு.

மின்குமிழ் செயலிழந்த பொழுதொன்றில் காமம் சுவாரஸ்யமற்றுப் போனதினால் நிலவொளியை மீண்டும் நகலெடுக்க வெளிவந்தவர்கள் அதனைக் காணமுடியாமல் கவலையுறுகின்றனர். உடனே பெரிய குளிர்சாதனப் பெட்டியொன்று தயார் செய்யப்பட்டு, அதற்குள் மாநாடு நிகழ்கிறது. நமக்கு நிலவு வேண்டுமென்றால் அதனைத்தூக்கி வந்து வைக்கக் கூடிய கழுகளை வளர்க்கவேண்டும். அவைகளிடம் அன்பு காட்ட வேண்டும். கழுகுகளை அன்பாக வளர்ப்பது எப்படி என்பதை வழிகாட்டக்கூடிய புத்தகங்களோ பாடத்திட்டங்களோ நம்மிடமில்லை என்பது பெரும் அவலம் என விம்மி முழங்கிய அறிஞர் பெருந்தகையோடு பலரும் வாஞ்சையுடன் கைலாகு செய்து பாராட்ட தயாராகுகிறார்கள்.

12.

பல்பக்லி

இப்படித்தான்

இக்கதைக்காக வெட்டி வைத்திருந்த குழிக்குள்
நம்மட பக்ரி மாஸ்டர் விழுந்து
துவாரம் ஒன்றினூடாக முன்னேறி
அப்பொந்தினுள் தஞ்சம் புகுந்திருந்த காலப்பகுதிக்குள்
தன்னுடன் பழகக்கிடைத்த பல்லிகளின் சிநேகிதத்தால்
அதன் பழக்கங்களும்
தன்னிடம் தொற்றிக் கொள்ள
'பல்பக்லி' என அழைக்கப்படலானார்.

பாரதிக்கு ஒரு அக்கினி குஞ்சொன்று கிடைத்தது தானே, அதனை அவன் பல்பக்லி இருந்த பொந்தினுள்தான் வைத்தானாம். பொந்தினையும் பாழாக்கி, காட்டையும் நாசமாக்கிய பாரதியை, நாக்கைச் சுழற்ற வந்து விழும் வசைச் சொற்களால் வரிந்து கட்டியவர் பல்பக்லி.

அவர் நாக்கை வெளியெறிந்து பீங்கானில் வைக்கப்படும் உணவைக் கவ்விக் கொள்வார்.நாக்கை மாத்திரமல்ல, முன் அறைக் கதிரையில் அமர்ந்தவாறே தன் கைகளை வாசலுக்கு எறிந்து சந்திக்க வருபவரிடம் வாசலில் வைத்தே கைகுலுக்கிக் கொள்வார். அவர் உடலுறவு கொள்ள எத்தகைய பொறிமுறையைக் கைக்கொள்வார் என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

மேலும் சில சொற்கள் இக்கதையில் இணைய அவருக்கு குழந்தைகள் பிறந்தன. அதுகளும் சந்ததிகளை விருத்தி செய்தன. அச்சந்ததிகளும் அவரைப் போலவே நாக்கையும் கைகளையும் இன்ன பிறதுகளையும் எறிந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் பெயர்கள் பிறப்புச் சான்றிதழில் ஒன்றாகவும் குறித்த மாற்றத்துடன் பொதுப்பாவனைக்கு வேறொன்றாகவும் காணப்படும்.

(உ +ம்: ஜோன் ==> பல்ஜோலி (பொதுப் பாவனைக்கு)

சாரு ==> பல்சாலி

ஜெயமோகன் ==> பல்ஜெயமோகலி

இப்படி எறிந்து அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதே தங்கள் வம்சத்தின் தனித்ததுவம் என்ற நிலைப்பாடு அவர்களுக்குள் கதையாடப்படலாயின.

சொல்லவிருக்கும் இச்சம்பவத்திற்குள் பிசியாக வேலை பார்த்துக் கொண்டிருக்கப் போகும் பல்ரியாலியின் அருகே என் மறதிக்குள் இருந்த ஒருத்தரை முசுபாத்தியாக தூக்கி வைப்பேன். அவர் முகமன் கூறி குலுக்கிக் கொள்ள, கையை பல்ரியாலியிடம் நீட்டுவார். தன்னிடம் நீட்டுவதைக் பார்க்கப்போகும் பல்ரியாலியும் கை கொடுக்க எத்தனிக்கும் பொழுது, பல்ரியாலியின் தந்தை ஓடிவந்து கைகளைத் தட்டி விடுவார். அருகிலிருந்து கைகொடுப்பது தங்கள் தனித்துவம் அல்லவே. பல்பக்லியைச் சேர்ந்தவர்கள் எவராவது பார்த்திருந்தால் என்னாகும். எவ்வளவு பெரிய இழுக்கு என உள்ளுக்குள் பொருமியபடி தூரச்சென்று கையை எறியுமாறு பல்ரியாலியினை உறுக்கி, தங்கள் தனித்துவத்தினைக் காப்பாற்றுவார்.

சில நாட்களுக்கு முன், பல்பக்லியைச் சேர்ந்த யுவதி ஒருத்தி இன்னொரு குழுமத்தைச் சேர்ந்த ஒருவரைக் காதலிப்பது அவளின் உறவினர்களுக்கு தெரிய வந்ததில் எதுவும் பிரச்சினையாகவில்லை. அவள் வீட்டார்கள் அவனை வரவேற்று, விருந்துபசாரம் அளித்தபின், ஒரு அறைக்கு அழைத்து வந்து கேட்டுக் கொண்டார்களாம்; ஆடை களைந்து அவனின் அவ்வுறுப்பினை எறிந்து காட்டும்படி.. அத்துடன் தான் பிரச்சினை துவங்கியிருக்கிறது.

அவர்களின் காதலுக்கு உதவும் பொருட்டு, முதற் பந்தியில் கதைக்காக வெட்டிவைத்த குழியினை மூடி விடலாமே எனத் தோன்றியதை என்மடியில் உறங்கிக் கொண்டிருந்தவளிடம் சொன்ன போது, அது இப்பிரதியில் ஒருவித வன்முறையைப் பரிந்துரைப்பதாக மாறிவிடும் என்கிறாள்.

*13.*

## ஆ. Terms and conditions of the novel

ஆ.*1)* 'அ' பகுதி இந்நாவலை வாசிக்கத் துவங்கும் எந்த வாசகரையும் மனம் நிறைந்த அன்புடன் வரவேற்பதாக குறிப்பிடப்பட்டிருப்பதனால் இப்பிரதி எல்லா வாசகர்களையும் திருப்திப்படுத்தி மகிழ்விக்கும் எனச் சொல்ல முடிவதில்லை. பிரதிக்குள் உருவாக்கப்பட்டிருக்கும் பல புதிர்வழிகளில் வாசகரை கைவிட்டுவிடக் கூடிய சூழ்நிலைகளும் இருக்கலாம்.

ஆ.*2) 20* பகுதிகளைக் கொண்டிருக்கும் இந்நாவலின் 2ஆம் பகுதியானது துண்டுதுண்டாக கழற்றிப் பிரித்துவைக்கப்பட்டிருக்கும் இயந்திரமொன்றின் பாகங்களாகச் சொற்களும் சம்பவங்களும் கிடப்பதை அவதானிக்கலாம். அப்பகுதியின் கடைசி வரியிலுள்ள கூற்றை உரசும்பொழுது, ஒரு வாசம் வெளிப்படும். ஏனைய ஒவ்வொரு பகுதிகளிலும் (1ஆம் பகுதி தவிர்ந்த) அத்தகைய வாசம் கொண்ட 2 கூற்றுக்கள் வைக்கப்பட்டுள்ளன. அவ்வாசம் கொண்ட கூற்றுக்கள் தான் கலைந்து கிடக்கும் 2ஆம் பகுதியை ஒழுங்குபடுத்துவதற்கான குறிப்புகள். ஏற்கனவே தீர்மானிக்கப்படும் குறிப்புகளைக் கொண்டு ஒழுங்குபடுத்த என்றைக்கும் எங்களுக்கு விருப்பிருந்ததில்லை எனச் சொல்பவர்களுக்கு கீழே 'ஆ.*5*' தரப்படுகிறது.

ஆ.*3)* Dayana hair style லில், நேர்த்தியாக ட்ரிம்ட் செய்யப்பட்ட தாடிமீசையும் புன்சிரிப்புமாகத் தோன்றும் மஹ்மூத் லியோஸாவின் தோற்றம், நடை, உடை, செயற்பாடுகளைக் கொண்டு அவரின் பால்நிலையைத் (GENDER) தெளிவாக இன்னதென தீர்மானிக்க முடியவில்லையே என்ற உங்களின் அங்கலாய்ப்பின் போதோ அல்லது அந்தமாதிரி ஆளா இது எனும் உங்களின் நக்கலின் போதான லியோஸாவின் எதிர்வினையும் –> இப்படியெல்லாம் இருக்கும் லியோஸாவிற்கு என்ன தைரியம், Dear.. I love you... Do you love me? என கதைமனிதர்கள் பலரும் சுற்றியிருக்கும் பொழுது வாசகராகிய உங்களிடம் கேட்டுவிட்டாள்/ன் என்பதால் மனதுக்குள் கோபப்படுபவர்களுக்கு :– உங்களின் மனவோட்டத்தை லியோஸாவினால் புரிந்துகொள்ள முடியுமாக

இருப்பினும்,மேற்கொண்டு உங்களுடன் உரையாடுவதும் உங்களை அலட்சியப்படுத்திவிட்டு வேறொருவரிடம் காதலை சொல்லத் தயாராவதும் உங்கள் இருவருக்கும் இடையிலுள்ள விடயம். எந்தத் தெரிவுக்குமான வாய்ப்பை இப்பிரதி கொண்டிருக்கும்.

ஆ.4) JiraZora. இவ்வார்த்தையை அவ்வப்பொழுது நாவலின் கதாமனிதர்களும் மனிதமற்றவைகளும் தாங்கள் பேசிக்கொள்ளும் வாக்கியங்களுக்கிடையில் செருகிக்கொள்வதற்கு, 'கடுவன்பூனை' என்ற அடையாளத்துடன் இருப்பதையும் அப்படி மற்றவர்களால் பார்க்கப்படுவதையும் பிடிக்காமல், JiraZora எனும் சொல்லாக மாறி, பல புதுப்புது அர்த்தங்களில் தன்னை நிகழ்த்திக் காட்டிய ஒரு பூனையின் செயலால் அச்சொல் பரவலடைய, பலரும் தங்களிடம் புதிதாய் உருவாகும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்காய் அச்சொல்லை உபயோகித்துக் கொள்கின்றனர். ஆக, JiraZora வின் அர்த்தங்கள் வாசகரின் கற்பனைக்குரியது.

ஆ.5) மேற்கூறிய நிபந்தனைகளையும் விதிமுறைகளையும் கவனமாக வாசித்து உள்வாங்கி அதன்படி நடந்துகொள்வதும் முற்றுமுழுதாக மேற்கூறியவைகளை புறந்தள்ளிவிடுவதும் அல்லது சிலதை மாத்திரம் கருத்திற்கொண்டு செயல்படுவதும் வாசகரின் தெரிவு சார்ந்தது.

14.

## ஏக பிரம்மையைப் பேயோட்டுதல்.

நிலப் பரப்பொன்றினை வரைந்த தாளை தனதறைச் சுவரினில் மாட்டிவிட்டு வெளியே வந்த வசீம் செத்துப் போனான். அவன் நன்கு ஓவியம் வரையக் கூடியவன்தான். வருடங்கள் உருண்டன. சிலரும் அறைக்கு வந்து வெளியேறிச் செத்துப் போனார்கள்.

பறந்து வந்த பூச்சிகள், வரையப்பட்ட அந்நிலத்தில் செத்துப் போயின. அவைகளின் பிரேதங்களுக்குள்ளிருந்து உருவாகி வெளிவந்த புளுக்களின் வாசத்தை மோப்பம் பிடித்துக் கொண்டு வந்த இரு மீன்கள், அந்நிலத்தில் ஆற்றினை உருவாக்கிக் கொண்டன. தன் முகத்தைப் பார்த்துக் கொள்வதற்காகக் கல்லொன்றைக் காலால் கவ்வியபடி, நீர்ப்பரப்பைத் தேடி வந்த காகம் அவ்வாற்றினருகில் கல்லைப் போட்டு, அதன் மேல் நின்றபடி நீரில் நெளியும் தன் முகத்தைப் பார்த்தது. பின்பதற்கு முடுக்கிக் கொண்டுவந்ததை ஆற்றருகில் பேண்டு தள்ள, அதன் எச்சத்திற்குள்ளிருந்த ஆலம் விதை பெருத்து வளர்ந்ததும் அதிலேயே கூடு கட்டிக் குடியேறியது.

பல பத்து வருடங்களுக்குப் பிறகு பாட்டனின் அறைக்கு வந்த வசீமின் பேரன் அந்த ஓவியத்தினைச் சுருட்டி எடுத்துக் கொண்டு வந்து வகுப்பறையில் தன் ஆசிரியரிடம் காட்டினான். அதனை வெகுவாக லயித்து ரசம் தட்டிய ஆசிரியர் இதோ ஓவியர் வசீமின் அசலான படைப்பு என மாணவர்களுக்குக் காட்டினார். ஓவியத்தில் நிறம் தீட்டப்படாத பகுதியைப் பார்த்த சிறுமி, "அந்தத் தாள் எப்படி உருவானது? அதையும் வசீம்தான் உருவக்கினாரா" எனக் கேள்வியெழுப்பி சுற்றியிருந்தவர்களை ஒரு உலுக்கு உலுக்கினாள்.

*15.*

**பெரும் கதை**

இருள் படிந்த படிமமொன்றைத் தூக்கி வைத்தாள். எதனையும் அதற்குள் பார்க்க முடியாது போக அவளைப் பார்த்தேன். அது இரவுக் குளக்கரை. பகல் போன்றதல்ல, இருண்டு விட்டால் பல தொகைப் பாசைகளுடன் உயிர்த்தெழுந்து விடுகிறது குளக்கரை. இரவை காதுகளால்தான் அதிகம் அறிந்து கொள்ள முடியும். கற்பனையும் தேவையென்றாள். காது கொடுத்தேன்.

சில்லூரி வண்டுகளின் சப்தங்களை உறுஞ்சிக் குவித்து சன்னமாகப் பாடிக்காட்டும் ஐந்தாறு மோக்கைகள் தங்களின் பாடல்களைச் சுற்றியே குளக்கரையின் இரவு வரலாறை எழுதிக் கொண்டிருந்தன. அநியாயம் இழைக்கப்படுவதை உணர்ந்து கொண்ட சில்லூரிகள், கூட்டம் பிரச்சாரம் பத்திரிகை துண்டுப்பிரசுரப் பகிர்வென ரகசியமாயும் பின் பரகசியமாயும் இயங்க, புரட்சி வெடிக்கிறது. மோக்கைகளே ஒழிக. ஒழிந்தால் குளக்கரையின் பிரச்சினைகள் மொத்தமும் தீரும். அமைதியே நிலவும். எனக் கேட்டு கற்பனித்துக் காட்டுகிறேன்.

அவளுக்குச் சிரிப்பு வந்திருக்க வேண்டும். சமாளித்துச் செருமிக்கொண்டவள், அப்படியென்றால் மோக்கைகளும் சில்லூரிகளும் மாத்திரமே கரையில் வசிப்பதாயும் சகல சில்லூரிகளும் வித்தியாசங்களற்றன; அவைகளின் தேவைகளும்தான் என நம்பியாக வேண்டும் இல்லையா..? எனக் கேட்டுக் கொண்டே என் காதை இழுத்து, கரையில் ஓராள் நடமாடுவதைக் காட்டுகிறாள்.

குளக்கரைக்கு வந்த ஒருத்தன் புதருக்குள் சிறுநீர் கழித்துவிட்டு அங்கிருந்த மரக்கிளைகளை முறித்தெடுத்துச் செல்கிறான். அவன் அங்கிருந்து நகரும் வரை மௌனித்திருந்து விட்டு கூச்சலிடுகின்றன சில்லூரிகள். அதோ மோக்கைகளின் சப்தங்கள்.. நம் புரட்சி என்றும் ஓய்வதில்லை.! ஆமாம் ஆமாமென பூம்பூம் மாடுகளாய்த் தலையாட்டிக்கொண்டு புரட்சிக் குரல்களைத் தேடி இலக்கியப் பிரதிகளைப் புரட்டுகிறார் என் நினைவோரத்திலிருந்து எட்டிப் பார்க்கும் பழம்பெரும் விமர்சகர்.

*16.*

திருமண மேடையில் பெற்றோர்கள் கைது..!
பெற்றோரை விடுவிக்கக் கோரி மாணவர்கள் போராட்டம்..!

*16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவரை பெற்றோர்கள் திருமணம் செய்துவைக்க முயன்றதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் மண்டபத்திற்குள் அதிரடியாகப் புகுந்த போலீசார் பெற்றோரை கைது செய்தனர். இச்சம்பவத்தில் திகைப்படைந்த சிறுவர்கள், என்ன செய்வதென யோசிப்பதற்குள் குடும்பத்தினரின் அவசர உந்துதலில் நமது ஊடகவியலாளர் தங்கி இருந்த இரகசிய அறையினுள் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டனர்.*

*சிறுவர்களின் வாக்கு மூலத்தின் படி, அவர்களிருவரும் 13 வயதிலிருந்து ஒருவரையொருவர் காத்தலித்து வந்ததும் இணைந்து வாழ பெற்றோரின் சம்மதத்துடன் திருமண ஏற்பாடு நிகழ்ந்ததும் தெரியவருகிறது. போலீசின் வருகையைக் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த பாடசாலை மாணவர்கள் சிலர் மண்டபத்தை விட்டும் போலீசை வெளியேற விடாமல் முற்றுகையிட்டு, பெற்றோரை விடுவிக்குமாறு போராட்டம் நிகழ்த்தி வருகின்றனர்.*

17.

## மூஸாவின் கோல்கள்

மொஸ் மலை. அதனையொட்டி வாழ்ந்த மக்கள் எவருமே மொஸ் எனும் பெயர் எப்படி வந்ததென அறிந்திருக்கவில்லை. பலரிடமும் கேட்டுப் பார்த்தாள். பின்பொரு கதை எழுதினாள். மூஸாவின் மரூஉ தான் மொஸ். அவர் இறுதிக் காலகட்டத்தில் வாழ்ந்த மலைதான் அது எனவும், இறைவன் மூஸாவிற்கு அளித்த கோல், பிர்அவ்னுடனான மோதல்களையெல்லாம் விபரித்து அம்மலைக்கு தன் கதை மூலமாக உயிர்கொடுத்தாள்.

அவள் கதையால் ஈர்க்கப்பட்ட மக்கள் புனைவின் சாத்தியத்தை நம்ப ஆரம்பித்தனர். பிறகொரு நாள் மலையின் இடிபாடுகளுக்குள்ளிருந்து பாம்பொன்றைக் கண்டு நெருங்க, அது தடித்த கோலாக மாறியது. மலையின் மையத்தில் அக்கோலை நிறுத்தி சுற்றிலும் தூண்கள் எழுப்பியதும் அதனை வழிபடத் துவங்கினர். அக்கோல் போன்ற சிறிய குச்சிகளைச் செய்து இடுப்பிலும் செருகிக் கொண்டு அலைந்தனர். அவள் கதை, வரலாற்று ஆவணமாகப் பயிலப்பட்டு பாதுகாக்கப்பட, அக்கோல் தன்னை எதார்த்தமாக நிறுவிக்கொண்டது. பக்தர்களும் அதிகரித்தனர்.

நிலையான எதார்த்தம், உண்மைகள் சலிப்பூட்டக் கூடியது. விபரீதமானதும் கூட. அக்கோலின் நினைவு அவளைத் தூங்கவிடாமல் கொத்தத் துவங்க மீண்டுமொரு கதை; முன்னைய கதையின் நீட்சியாக. அக்கதைக்காக ஒருவனைப் புனைந்து அவனிடம் இன்னும் 4 கோல்களைக் கொடுத்தனுப்பினாள். பெற்றுக்கொண்டு மலையில் அவைகளை ஒளித்து வைத்துவிட்டு மக்களிடம் வந்தான். மூஸாவின் கோலிற்கும் இறைவனுக்கும் சம்பந்தமில்லை என்றான். காண்போரிடமெல்லாம் கோலைப் பற்றியே விவாதித்தான். ஆத்திரமடைந்த மக்கள் அவனைக் கொல்லத் துடிக்க, நீதிபதிகள் முன்வந்து தடுத்தனர். அவனைத் திருத்துவதற்காக குறிப்பிட்ட காலம்வரை பாலைவனத்தில் தடுத்து வைத்தனர். மீண்டும் வந்தான். அவன் கருத்தில் எந்த மாற்றமுமில்லை. மறுபடியும் அவனைத் திருத்தும் நோக்கில் எலியாய் மாற சபித்து, பாம்புகளின் பாளயத்தில் சிறைவைத்தனர். சோதனைகள் தாண்டி உயிரோடிருந்தான். அவன்

நிலைப்பாடு இன்னும் வலுவடைந்திருந்தது.

அன்று பிர்அவ்ன் மூஸாவை நம்ப மறுத்தான். அவனுக்கு நேர்ந்த முடிவெதுவோ அதுதான் இவனுக்கும். கடலுக்குள் மூழ்கடித்து மரணதண்டனை கொடுத்துவிடலாம். இம்முறை சமூக சீர்திருத்தம் கருதி தீர்ப்பெழுதப்படுவதாக கூறினர். கடலைப் பிளக்க மூஸாவின் கோல் தேவை. அதனை எடுத்துவர மலைக்குச் சென்றவர்கள் அதிர்ந்து போயினர். 5 கோல்கள் நின்றிருந்தன. ஒவ்வொன்றாக எடுத்துத் தரையில் போட அனைத்துமே பாம்பாக மாறிக்காட்டின. குழப்பத்துடன் கரைக்கு வந்தனர். நீதிபதிகளோ செய்வதறியாது திகைப்பதைக் கண்டு சூழ்ந்திருந்த மொத்த நீதியையும் பார்த்துப் புன்னகைத்தான். அவனாகவே முன் வந்து ஒவ்வொரு கோலாகக் கரையில் போட்டான். அவைகள் பாம்பாகிக் கடலினுள் புகுந்து மறைந்தன. கடல் பிளந்து கொள்ளவேயில்லை. பின் சுற்றியிருந்தவர்களை ஏதோ சொல்லவருபவனைப் போல் பார்த்துவிட்டு நீதியின் முன்னால் பெரும் மரமென உருவெடுத்தான். அவன் கிளைகளெங்கும் கோல்கள் முளைத்தன.

## 18.

## வேண்டுவதெல்லாம்

கச்சான் காற்றடித்து காட்டிலே நான்கு மரம் நிற்பது போல் உச்சியிலே நாலு முடி ஓரமெல்லாம்தான் வழுக்கைத் தலை என்பதாக இருந்தாலும் பரவாயில்லை. எனக்கொரு மாமா வேண்டும். அப்படியொருவர் கிடைத்துவிட்டால், கெஞ்சிக் கூத்தாடியாவது இந்தக் கதைக்காக அவரை தாடி வளர்க்க வைப்பேன். அடர்ந்த தாடிக்குள் ஊசிப் பாம்புகளாய் நெளிந்தபடி நரை மயிர்கள் இருக்கும். என்னைக் கொஞ்ச வரும் போதெல்லாம் நெளியும் அப்பாம்புகளை விரல்களினால் நீவியும் ஒன்றிரண்டை புடிங்கிவிடுவதுமாய் இருப்பேன். விடுபடும் பாம்புகள் வேகமாக ஊர்ந்து செல்வதைப் பார்த்து அவைகள் எங்கே விரைகின்றன எனக் கேட்டால், ஒண்ட மாமியத் தேடித்தான் எனக் குறும்புகள் செய்வார்.

ஒரு முறை ஈரமண் கிடந்த ஐஸ்கிறீம் கப்பிற்குள் அவராகவே தனது கருமையான தாடி மயிரொன்றைப் புதைத்து விட்டு என்னிடம் தருவார் கூடவே வைத்துக்கொள் என. அது ஊசி இலை கொண்டதாய் முளைக்கத் துவங்கியதும் எனதறைக்குள் வைத்தே பராமரித்து வருவேன்.

அதன் பிறகு வரக்கூடிய இரவொன்றில் அச்சம்பவம் நிகழும். ஒரு அடி உயரத்திற்கே வளர்ந்திருக்கப் போகும் அச்செடி, வேகமெடுக்கும் பாம்பின் சப்தத்துடன் அது வைக்கப்பட்டிருக்கும் சுவர்வழி நீண்டு ஏனைய சுவர்களிலும் பற்றிப் படர்ந்து அறையின் வெளிப்பக்கமாய்ச் செல்லும். அச்சப்ததிற்கு விழித்துக் கொள்ளப்போகும் நான், சில நொடிகள் உறைந்து உடைவேன். அந்த உடைவு பனிக்கட்டியாய் மாறிச் சிதறுவது போலிருக்குமா என்று தெரியாது. ஆனால், நிச்சயம் அடுத்த நிமிடம் என்னைக் கூட்டி அள்ள சிரமப்படுவேன். அதன் திடீர் நடத்தை மாற்றத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் அதனிடமே விளக்கம் கேட்டுவிடுவேன். ஒவ்வொரு நாள் இரவும் தான் இப்படித்தான் செய்துவருவதாகக் கூறும்.

அந்தக் கூற்று நான் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ ஏதுவான நியாயமாக இருக்காது. எனதறைக்குள் என்னுடன்

ஜீவிக்கும் அச்செடி ஏன் இப்படியெல்லாம் நடந்துகொள்கிறதென நான் புரிந்துகொள்ள வேண்டாமா? தக்க நியாயம் வேண்டும் தானே.. இணைந்து வாழ புரிந்துணர்வு முக்கியம் தானே.. என அதனைப் பார்ப்பேன்.

அதுவும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, கட்டில் கிடக்கும் சுவர்ப் பக்கத்தில் கொழுவப்பட்டிருக்கும் ஓவியத்தைக் காட்டும். அதில் ஆற்றுக்குள்ளிருந்து உதிக்கும் சூரியன் வரையப்பட்டிருந்ததைப் பார்த்ததும் ஓஹ்.. அது தானா விசயமென எனக்குப் புரிந்துவிடும். சூரிய ஒளியினை நோக்கித் தாவரங்கள் வளைந்து வளருமென விஞ்ஞான ஆசிரியர் விளக்கம் தந்தது மனதின் ஏதோவொரு பகுதியிலிருந்து நினைவுக்கு மேலாடி வரும். சூரியஒளித் தேவைக்காக எப்படியெல்லாம் ஒரு செடி தன்னைத் தகவமைத்துக் கொள்கிறதெனும் பிரமிப்புடன் அதனைப் பார்ப்பேன்.

என் பிரம்மிப்புக்கு அது தன்னை மெல்ல சிலுப்பிக் கொள்ளும். அச்சிலுப்பல்களுக்குள்ளிருந்து கிண்டலாய் நகைக்கும் அந்தக் குரல் வேண்டும். என் சகவாழ்வு நிலைப்பாட்டிற்குள் பதுங்கிக் கிடக்கும் வன்மத்தை அம்மணமாக்கி நகைக்கும் குரலினைக் கொண்ட ஒரு தாடிக்கார மாமா வேண்டும்.

**19.**

## நாக்கோட்டி நயத்தல்

வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்திற்கிடையில் வைத்திருக்கும் பேனா முனைக்குள்ளிருந்து அருகிலிருக்கும் தாள் மீது குதித்து, நான் கட்டியெழுப்பவிருக்கும் சம்பவங்களின் முக்கிய பகுதிகளாய் அமையப் போகும் கதை–மனிதர்கள் வைத்திருப்பார்களே கண்ணாடிக் குவளைகள், அது போன்ற குவளைகள் தான் என் அலுமாரியிலும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

இடைச்செருகலாய் ஒரு குறிப்பு : குவளைகளை மூன்று வகையாக அவர்கள் பிரித்து அழைப்பார்கள். 1.கு 2.குவ 3.குவளை. வெற்றுக் குவளையை 'கு' என்றும், பூரணமாக நிரம்பாத குவளையை 'குவ' என்றும், மட்டம் வரை நிரம்பியதனையே 'குவளை என்றும் அழைப்பார்கள்.

அவர்களிடம் ஒரு பழக்கமிருக்கும். நான்கைந்து குவளைகளை நாக்கோட்டி நக்கிப் பார்த்ததும் உடனே உந்துதல் பெற்று, தங்களுக்கு நேர்ந்த வாழ்பனுபவங்களை 'கு' விற்குள் புலம்பித் தீர்த்து குவளையாக மாற்றிவிடுவர். பின் அதனைப் பல நகல்களெடுத்துப் பகிர்ந்து, சிலரையும் ஒன்றுகூட்ட அவர்களும் டிசைன் டிசைனாக அதற்குள் நாக்கோட்டி நக்கி, கூட்டாகக் கட்டிப்பிடித்துப் புலம்பிக் கொள்வார்கள்.

நம் வாழ்வு புலம்பல்களால் நிரம்பியது. புலம்பல்களே நம் சமூக உண்மையென பேனா முனைக்குள்ளிருந்து புதிதாக குதித்து வரவிருப்பவர்களும் நம்பும் படியாக சூழலை உருவாக்கிவிட்டிருப்பார்கள்.

அது போன்ற குவளைகளுக்குள் நாக்கோட்டிப் பழக்கப்பட்டவர்களால் வேறெந்த வகையில்தான் 'கு'னாவை குவளைகளாக்க முடியுமென அவர்களுக்கு மத்தியில் கேட்டு வைப்பேன்.

அக்குவளைகளை எதிர்கொள்ளும் போது, என்னிடம் காய்ந்த இலைகள், குச்சிகள், கம்புத்துண்டுகள் இருக்கும். நிரம்பியிருக்கும்

புலம்பல்களுக்கிடையில் தத்தளிக்கும் உயிரிகளின் மீட்புக்குப் பயன்படலாம் எனும் முன்னாயத்தமாக அப்படி வைத்திருப்பேன்.

இப்பெடியெல்லாம் அவர்களைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும் போது, அவர்களில் ஓரிருவர் என்னுடன் மோதி எதிர்க்க முன்வரலாம். உன்பாட்டிற்கு 'கு' னா –> குவளை –> புலம்பல் பேர்வெளிகள் –> நாக்கோட்டி நக்கிகள் என கதைகட்டி, எங்களுக்கான சுயாதீன இயங்குதலைப் பிரதிக்குள் தர மறுத்து, உனது விருப்பப்படி கதையளக்கிறாய். ஆசிரியெனன்றால் பிரதிக்குள் எதுவும் செய்யலாம் என்ற அதிகார மமதையில் எங்களை வைத்து மசிரு புடுங்கி, உன்னிடமிருக்கும் 'கு' னாவை நிரப்பிக் கொள்ளப் பார்க்கிறாய்.

அது மட்டுமா.. பார்,

'நாக்கோட்டி நயத்தல்' என தலைப்பிட்டிருப்பதே உன் முற்கற்பிதத்தை எங்களில் கவிழ்த்துவிட எடுத்த முடிவின் பீத்தல்தான் என்பது தெரிந்துவிடுகிறது. எங்களை மூடிக்கொண்டு பின்தொடரும் ஆட்டு மந்தைகளாக, கழுதைக் கூட்டங்களாக பிரதிக்குள் கட்டமைத்து விட்டு – உன்னைப் பொதுப் புத்தியிலிருந்து விலகி நிற்கும் தனியனாக, மாற்று மருந்துக்காரணாக, காப்பாற்ற வந்த ஹீரோவாக, குவளைகளுக்கு மத்தியில் ஒரு தேவதூதன் என்ற பில்டப்புடன் உன்னை கட்டமைத்து கதையாடியிருக்கிறாய் பார்.. எப்படிப்பட்ட பேர்வெளி நீ..? என என்னைப் பார்த்து அவனுகள் வசனம் பேசலாம்.

இப்பெடியெல்லாம் அவனுகள், நான் கட்டியெழுப்பவிருக்கும் சம்பவங்களிற்கிடையே குறுக்கிட்டு எனது பிரதிக்குள் வன்முறை இருப்பதாய் வாதிடலாமென யோசிக்கத் தோன்றும் பொழுதுதான் நினைவுக்கு வருகிறது. நல்ல காலம், இவ்வளவு நேரமாய் எதிர்கால வினைமுற்றில் எழுதிப்பார்த்தது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போய்விட்டது. இன்னும் நடக்கவில்லை தானே. நடந்ததாய்ச் சொல்லப் போகும் கதைக்குள் இப்படிப்பட்டவனுகளை சேர்த்துக் கொள்வதா? இல்லையா? அப்படி சேர்த்துக் கொண்டாலும் அவனுகளின் அவதானிப்பை எப்படி திசை திருப்புவதென எனக்குத் தெரியாதா என்ன?

20.

## ஆதிப் புனைவு

நரகத்தின் மீது சத்தியமாக. இறைவன் மிகவும் கொடூரமானவன். அந்நரகமே அவனது கொடூர பக்கங்களுக்கான அத்தாட்சி. சுவர்க்கத்தின் மீது சத்தியமாக. இறைவன் அதீத அன்பானவன். அச்சுவர்க்கமே அவனது இரக்க பக்கங்களுக்கான அத்தாட்சி.

அவன் இறைவனானான்.

ஆனதிலிருந்து தனித்திருந்தான்.

அத்தனிமை கோபத்தின் ஊற்றாகியது.

கோபம், தகிக்கும் தீ போல் உஷ்ணம் நிறைந்தது.அக்கோபத்தின் உஷ்ணங்களிலிருந்து சாத்தான் ஜனித்தான். இருவரும் நண்பர்களாயினர். வன்முறையும் கோபமும் அவர்களின் மொழியானது. அவர்களின் சுயம் அம்மொழியால் கட்டமைக்கப்பட்டது.

சாத்தான் அலாதியான சிந்தனைக்காரன்.

திரவமும் சதையும் கொண்ட பொருள் செய்தால் அதற்கு உயிருணர்வூட்டி விதம் விதமாய்த் துன்புறுத்தி விளையாடலாமே என்றான். அவனது யோசனையில் வியந்த இறைவன் எங்கே விளையாடுவது என்றான்.

அதற்காக இருவரும் சேர்ந்து நரகைக் கொடூரங்களின் மொத்த ரூபமாய் உருவாக்கினர்.

பின் திரவமும் சதையும் கொண்ட மனிதனை உருவாக்குவதில் இறைவன் அதிகம் அக்கறை கொண்டான். ஆகவே, அது இறைவனின் சாயலில் இருந்தது. அம்மனிதன் பெண்ணாக இருந்தது. அவளுக்கு வலிக்கான உணர்வைக் கொடுத்தான்.தனிமை, கோபம், பசி, தாகம், விருப்பு, வெறுப்பு, காதல், பிரிவு, ஏமாற்றம் என ஒவ்வொன்றாக அவளினுள் ஏற்றினான்.

சாத்தான் நரக வாசலில் காத்திருந்தான்.

இறைவன் மனிதனுடன் தோன்றினான்.

வாசலின் விளிம்பிலேயே வேதனையிலிருந்து காப்பாற்றும் படி கதறி அழ ஆரம்பித்தது மனிதன்.

அவளின் கண்ணீர்த் துளிகள் இறைவன் மனதை ஈரப்படுத்தியது. அவ் ஈரம் அவன் மனதில் ஒளியாய்ப் பீறிட்டது. அவ்வொளியிலிருந்து தேவதைகள் தோன்றினர்.

சாத்தான் மனிதனை நரகுக்குள் தள்ளிவிடும்படி உறுமினான்.

இறைவனோ முடியாதெனப் பிடிவாதித்தான்.

கோபத்தில் சாத்தான் நெருப்பாய்க் கொந்தளித்தான்.

இறைவன் அப்பொழுதுதான் உணர்ந்தான். தான் கோபத்தின் உருவம் மட்டுமல்ல என்று. உடன் அவனுள் புதிய வசனம் எழ அதனை உச்சரித்தான். "இறைவன் எவனுக்கும் நிகரானவனல்ல. அவனுக்கு நிகர் எவனுமில்லை".

பின் எல்லோருக்கும் இறைவன் கட்டளையிட்டான். அப்புதிய வசனத்திற்குக் காரணமான மனிதனுக்கு சிரம் தாழ்த்தும் படி.

தங்களின் ஜனனத்தின் உந்துவிசையான மனிதனுக்கு தேவதைகள் சிரம் தாழ்த்தினர். மரியாதித்தனர்.

சாத்தானோ முடியாதென பிடிவாதித்தான். இறைவனை எச்சரித்தான். அந்த எச்சரிப்பிற்கு புன்னகைத்த இறைவன், நரகிற்கு முற்றிலும் மாறாக சுவர்க்கத்தைப் படைத்து மனிதனை அங்கு வாழவைத்தான். தான் சொல்லும் படியே நடக்குமாறு கட்டளையிட்டான்.

பின் சாத்தானுடன் வாதம் நடந்தது.

சுவர்க்கம் வேண்டாம். அழித்துவிடுமாறு வாதிட்டான் சாத்தான்.

இல்லை. சுவர்க்கம் நரகம் இரண்டும் என் இரு பக்கம். நான் புது விதிமுறைகளை உருவாக்குவேன் என்றான் இறைவன்.

விதிமுறைகளும் உருவாக்கப்பட்டன.

நரகிற்கென்றே படைக்கப்பட்ட மனிதனை அவனிற்காக முதலில் படைக்கப்பட்ட நரகிற்கே கொண்டு வந்து காட்டுவதாக சபதமெடுத்து பாம்பாக மாறினான் சாத்தான்.

மறு நொடியே இறைவன், அண்டவெளியில் உலகிற்கென ஒதுக்க நினைத்த இடத்தை நோக்கி 'குன்' என்றான். உருள ஆரம்பித்தது பூமி.

21.

## மூத்தம்மாவின் விரல்கள்

என் தலைமுடிகளின் முனைகளில் மூத்தம்மாவின் விரல்கள் முளைக்க வேண்டும். தலை சாய்க்க நினைக்கும் இடமெல்லாம் அவளின் மடியாக வேண்டும். என்னருகில் அவள் இருந்த பொழுதெல்லாம் தலையில் எந்தக் குடைச்சலும் இல்லாவிட்டால் கூட அவள் மடியில் தலையை ஒப்படைத்து, பேன் பார்க்கச் சொல்வேன். அவளும் இல்லாத பேனை நொடிக்கு நொடி கண்டு பிடித்து, ருசி தட்டிக் குத்திக்கொண்டிருப்பார். எங்களுக்கிடையில் அது ஓயாத நாடகமாக நீண்டு கொண்டிருக்கும்.

ஒரு முறை பெண் பிள்ளைக்கு மட்டும் தான் இனி பேன் பார்ப்பேன் எனச் சொல்லிவிட்டாள். உடனே முன் வீட்டிற்குச் சென்று நண்பியின் பாவாடை சட்டைக்கு மாறி, முடியையும் நீள வைத்து கூந்தலாக மாற்றிக் கொண்டு, மீண்டும் மூத்தம்மாவின் மடிக்கே தஞ்சமடைந்தேன்.

அவளின் விரல்கள் முடிகளுக்கிடையில் பாதை பிரித்துத் தேட ஆரம்பித்தன. ஒரு கணம் அவளின் விரல்கள் தேடுவதை நிறுத்திய போது, என் தலைக்குள் கூர்ந்து எதையோ கவனிப்பதாகத் தோன்றியது. என்னவாக இருக்கும்? ஒருவேளை, ஐந்து பேன்கள் சேர்ந்து ஆறாவதாக தங்களுடனிருந்த பேனை வலுக்கட்டாயமாகப் பதுங்கியிருந்த முடிக்கற்றைக்குள் இருந்து மூத்தம்மா பிரித்து வைத்த பாதையில் தள்ளிவிட்டு, தங்களைத் தேடும் விரல்களைத் திசைதிருப்பி தப்பிக்க முயன்றிருக்கலாம். விழுந்த பேனோ தள்ளிவிட்டவைகளுக்கு சாபமிட்டு ஏசியபடி தப்பித்து ஓட, அதனை எங்கு வைத்து மடக்குவதென அவள் கூர்ந்து திட்டமிட்டுக் கொண்டிருக்கலாம்.

அல்லது

5 பேன்கள் சேர்ந்து ஆறாவதிடம் கதையாட ஆரம்பித்திருக்கலாம். இதோ பார், பலர் வாழ்வதற்காக உன்னைத் தியாகம் செய்யக் கிடைத்தது பெரும் பேறு. எங்களுக்காக உன்னை அர்ப்பணிப்பதை நம் வரலாறு பேசும். பிறருக்காக தன் உயிரைக் கொடுப்பதற்கு

அளப்பெரிய அன்பு தேவை. அது உன்னிடமிருக்கிறது. உனதன்பின் பெருமை எங்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் என்றும் பசுமையாக வாழுமென சொல்லிச் சொல்லி அப்பேனைத் தயார்படுத்த, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பதுங்கியிருந்த முடிக்கற்றைக்குள் இருந்து பிரித்து வைத்த பாதையில் குதித்து, அவளின் விரலை நோக்கி நடந்து வருவதைப் புதினமாகக் கவனித்துக் கொண்டிருக்கலாம்.

இப்படியாக யோசித்தது அவளுக்கும் விளங்கிவிட்டது. எண்ட பொம்பளப் புள்ளட யோசனையப் பாரன் என்று தலையை முத்தமிட்டாள். நாங்களிருந்த பன்பாய்க்கு அடியில் எதையோ தேடித் துழாவும் போது சொன்னாள், ஆறு பேன்களின் இரண்டு சம்பவங்களும் எதனையோ ஒப்பிட்டுக் காட்டுவதாய் இருப்பதாக.

துழாவிய கையில் சீப்பு அகப்பட்டது. எடுத்து தலையை ஒரு முறை வாரினாள். சீப்பின் பல்வரிசை ஓரத்தைப் பார்த்து, ஆறு பேன்கள் அகப்பட்டிருப்பதாகச் சொன்னாள். உடனே ஆறிற்குமான அடுத்த சம்பவத்தின் பக்கமாய் நகர்ந்தேன். ஆம், மூத்தம்மா அருகிலிருந்த தண்ணீர்க் கோப்பைக்குள் சீப்பைத் தட்டினார். நீரில் விழுந்த பேன்களில் ஒன்று மட்டும் தப்பித்துக் கரையேற தாறுமாறாக உதைத்து நீச்சலிடிக்க ஆரம்பித்தன.

ஏனைய ஐந்தும் தங்களின் பாட்டிற்கு கோப்பையின் அடியில் மூச்சடக்கி நடந்து கொண்டிருந்தன. நீங்களும் நீச்சலடித்துக் கரையேறாமல் என்ன செய்கிறீர்களென மூத்தம்மா அவைகளிடம் விசாரித்தாள். அதற்கு தாங்கள் பேன்கள் என்பதாகவும் பேன்கள் எதை செய்ய வேண்டுமோ அதனையே அவைகள் செய்வதாகவும் என்றைக்கும் அதனை பேணுவோமெனப் பதிலளித்துவிட்டு அதோ அங்கே கோப்பையின் ஓரத்தில் கறுப்பாக முடிபோல் அசைகிறதே அது என்னதெனக் கேட்டபடி நகர்ந்தன.

மூத்தம்மாவின் விரல்களும் அவர் மடியில் கிடக்கும் என் கூந்தலுக்குள் இல்லாத பேன்களும் ஓயாது நிகழ்த்தும் கதைகள் பார்.

22.

## கற்களின் வழியாய்

ஸியாவ்மார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன் மிருகங்களாக வாழ்ந்து பரிணாமமடைந்த பரம்பரையினர். கிடைத்த வெவ்வேறு கல்வெட்டுக்களின் படி நூற்றாண்டுகளுக்கு முன் மெதுவாகத் தவழ்ந்து ஓட்டுக்குள் பதுங்கி, நீரிலும் நிலத்திலுமாய் ஆமைகளாக வாழ்ந்திருக்கிறார்கள். சுருண்டு நெழிந்தூர்ந்து பாம்புகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். மரத்திற்கு மரம் தாவி குரங்குகளாகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

அவர்களின் வம்சாவழியினர் இரு பிரதேசங்களில் இன்னும் வாழ்ந்து வருவதைக் கேள்விப்பட்டுச் சென்று சந்தித்த சமயம் கல்வெட்டுக்களை முன்வைத்து அவர்களின் பூர்வீக வரலாறு குறித்து கலந்துரையாட,

முதலாவது பிராந்தியத்தைச் சேர்ந்த வயதானவர்: எங்கள் மூதாதையர் பாம்புகளாக ஊர்ந்து சீறித் திரிந்தவர்கள்தான். அவர்கள் ஒரே கவ்வுதலில் நான்கைந்து எலிகளைத் தொண்டைக்குள் சிக்கவைக்கும் திறன்கொள் வகைப் பாம்பினமாய் இருந்ததாக சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் வீட்டின் சமயலறைப் பாத்திரங்கள் வீழ்ந்துருளும் சத்தங்களில் விழித்துக் கொண்ட அவர் மனைவி, இந்த எலிகளின் தொல்லை எப்பொழுது தான் தீருமோ என விசனப்பட்டுக் கொண்டு சமயலறைக்குள் நுழைகிறார்.

இரண்டாவது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்: அந்த வயோதிபர் சொன்னது போல் பாம்பாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவரோ அவர் சமூகமோ பாம்பைக் கடவுளாகக் கருதி வழிபடுபவர்களில்லை. பாம்பின் குணங்களையும் அவர்களிடம் காண முடியாது. எங்களின் தரப்பு ஆமைதான். அதுதான் எங்களின் மூதாதயராக இருந்திருக்க முடியும். எங்களின் வாழ்வு இந்த ஆற்றங்கரையைச் சார்ந்தது. மீன் பிடித்தல்தான் வாழ்வாதாரம். ஆமை போன்று ஈரூடகவாழியாய் ஜீவித்து வருகிறோம். பக்கத்து ஊர்காரர்களும் இந்த ஆற்றில் உரிமை கோருகிறார்கள். எங்களின் பூர்வீக வரலாற்றினை முன்வைத்து, ஆற்றின் மீதான எங்களது

முன்னுரிமையை பிரகடனப் படுத்தலாம் என்றிருக்கிறோம்.

◉

கைகளுக்குள் அகப்பட்ட கற்களை வைத்துக் கொண்டு சிந்தித்த கற்பனையை இரு சமூகத்தவர்களிடம் கேட்டுப் பார்த்திருக்கிறேன்.

குரங்காக வாழ்ந்த வரலாறினை எவரும் உரிமை கோரவில்லை. பின்பொருகாலம் அதற்கான தேவையும் வரக்கூடும்.

23.

## பெருகிக் கொதுகொதுப்பது

அவனிடம் ஒரு திரைச்சீலை இருந்தது. தன்மனதின் ஈரப்பகுதியில் அதனைப் போட்டுவைத்திருந்ததால் சீலையெங்கும் பாசிபடர்ந்து தாவரங்கள் உயிர்த்தெழ வேறுபல உயிரிகளும் பெருகித் தலைநீட்டி அசைந்தன. நெடுநாள் தோழியான மென்ஹாவுடன் அந்தத் திரைச்சீலை பற்றிப் பேசநேரும் பொழுதுகளில் அவன் வார்த்தைகளின் இடைவெளிகள் எங்கும் உண்ணிப்பூலப் பட்சிகளெல்லாம் சஞ்சரித்து நளினம் காட்டும். அவைகளில் இரண்டு மென்ஹாவுடன் வந்து அவள் வீட்டு முற்றத்தில் வாழ்ந்து வருகின்றன.

அவன் வீட்டிலோ ஒவ்வொரு அறைக்கும் தேவைப்படும் பல்வேறு மெசின்கள் தாராளமாக இருந்தன. வீட்டுப் பின்புறத்திலுள்ள குடோனுக்குள் அவைகள் போன்ற பழுதான மெசின்களும், வீட்டிற்குள் புதிய புதிய மொடல்கள் அறிமுகமாக, பழைய மொடல்களும் நுழைந்து, அவைகளின் கனவளவு காற்றினைக் குடோனுக்குள்ளிருந்து வெளியே தள்ளிக்கொண்டிருந்தன. ஒரு தடவை டீவியில் வண்ணம் காட்டிக் கொண்டிருந்த ரோபோ; அதுதான் 'துரித கதியில் துல்லியமாக வீட்டுவேலைகளைச் செய்யுமே' அந்த ரோபோவின் விளம்பரத்தினால் கவரப்பட்ட வீட்டினர் தங்களின் வீட்டிற்கும் ஒன்றென ஆசைப்பட, அதனை வாங்குவதற்கான தொகையினைப் புரட்டக் களமிறங்கினான்.

எங்கோ இருக்கும் நாடுகளில் ஆரோக்கியத்திற்காக புழுக்கள் உணவாக உட்கொள்ளப்படுவதாகவும் அவைகளுக்கான கிராக்கியும் விற்பனைக்கான போட்டியும் அதிகரித்திருப்பதால் புதுப்புது வகைப் புழுக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்த கொம்பனிகள் பல நாடுகளுக்கும் ஏஜென்டுகளை அனுப்பின. ஒரு ஏஜென்ட் அவனது பிரதேசத்திலும் புழுக்கள் நிறைந்த பகுதியொன்றைத் தேடுவதாய்த் தகவல் கிடைக்க, தன்னிடமிருந்த திரைச்சீலையை விரித்துப் பார்த்தான். ஓரிரு புழுக்கள் நெளிவது தென்பட, உற்சாகத்தோடு திரைச்சீலையின் பின்னப்பட்ட நூல்களுக்குள் இடவெடுத்துப் பார்த்தான். அவன் நினைத்தது போல்

எந்தப் புழுக்களின் அசைவும் இடுவல்களுக்குள் இல்லை.

விரித்த சீலையை அப்படியே பார்த்தபடி குந்தியிருந்தவனுக்கு ஒரு யோசனை மண்டைக்குள் குத்துண்டு நெளிந்திருக்க வேண்டும். குதித்தெழுந்தவன் திரைச்சீலைக்குள் சுற்றித்திரிந்து கொண்டிருந்த பூச்சிவெட்டைகளையெல்லாம் பிடித்து அவைகளை வளை வளையென வனைந்து புழுவாய் நெளிய வைத்தான். எஞ்சியிருந்தது தாவரங்களும் பாசிகளும் தான். இலை பூ பிஞ்சு காய் பழம் என அனைத்தையும் வளைத்துப் புழுவாய் நெளியவைதான். திரைச்சீலையெங்கும் புழுக்கள் நெளிந்து கொது கொதுத்தன. உடனே ஏஜென்டிற்கு போன் பண்ணி அழைத்தான். நானோ ஓடிச்சென்று மென்ஹாவின் வீட்டுமுற்றத்திலிருந்த பட்சிகளிடம் தகவலை எத்திவைத்தேன்.

பார்வையிட வந்த ஏஜென்ட் அவனைப் பாராட்டி பணத்தொகையினைப் பேரம் பேசிக் கொண்டிருக்கும் சமயம், திரைச்சீலைக்குள் நுழைந்த அவ்விரு பட்சிகளும் புழுக்களாக நெளிந்து கொண்டிருந்தவைகளை நீவிவிட, தப்பித்தவைகளும் சேர்ந்து ஏனைய அனைத்தையும் கணப்பொழுதில் நீவிவிட்டன. திரைச்சீலையே உருமாறி அதற்குப் புதுமுகம் பரிணமித்ததைக் கண்ணுற்ற ஏஜென்ட் அவனை முறைத்துவிட்டு, காரில் ஏறி மறைந்தார். அது அவனை நிதானமிழக்கச் செய்தது. கோபத்துடன் திரைச்சீலையை தூக்கி வீசி உதறிவிட முனைந்தவனைத் தடுத்து, உங்களிடம் அழைத்து வந்திருக்கிறேன். அவனுடன் பேசிப் பாருங்கள். உங்களின் உரையாடலினூடாக அவனை convince பண்ண முடியுமா?

24.

கதகதப்பு

திருடனின் நிதானத்துடன் பெட்டியை நைசாகத் திறக்கிறேன். உள்ளே வெண்ணிறப் புகைமூட்டம். விரல்களில் ஒன்றைப் பெட்டிக்குள் கொண்டு சென்ற கை, வெடுக்கென்று அதனை வெளியே இழுத்துவிட, உடல் சிலிர்த்துக் கொள்கிறது. பார்வையின் அறிதலை தொடுகையின் அறிதல் பனிமூட்டமாக மாற்றிவிடுகிறது.

என் குளிர்ப் பொழுதுகளை கதகதப்பூட்ட அவள் உச்சரிக்கும் சொற்களில் இரண்டைத் தனிச்சையாகச் சொல்லிப் பார்க்க, அவ்விரண்டும் உதடுகளிலிருந்து பெட்டிக்குள் விழுந்து விடுகின்றன. என்ன செய்வதெனத் தடுமாறும் சமயம்தான் பெட்டிக்கு அருகிலிருந்த தலைக்கவசத்தை அறிமுகப்படுத்தி எழுதுவதனூடாக, அடுத்த சம்பவங்களை நகர்த்தலாமெனப் பார்க்கிறேன்.

பெட்டியில் பொறிக்கப்பட்டிருந்த அடையாளம் தலைக் கவசத்திலும் இருந்தது. தூக்கித் தலையில் வைத்ததும் கண்களுக்கு முன்னால் கண்ணாடித் திரை உருவெடுக்க அதனூடாக பெட்டிக்குள் பனிமூட்டங்களை ஊடுருவிப் பார்க்க முடிகிறது. கேட்கவும் முடியும் போலிருக்கிறது.

பார்வைப் புலம்: விழுந்த சொற்களிலொன்று அடிபட்டு வீங்கிக் கொழுத்திருக்கிறது. அதனருகே மற்றைய சொல். இரண்டும் ஏரிக்கரையை அண்மித்திருந்த புதர்களினூடே நடந்துவர அப்பகுதிகள் நிறம் மாறும் சலனம்.

கேள்விப் புலம்:

"உனக்கு நீந்தத் தெரியாதா? நல்லவேளை, நானிருந்ததால் காப்பாற்றி விட்டேன்"

"அவதானித்தாயா இங்கிருக்கும் புற்பூண்டுகள் நிறம் மாறுவதை. ஒரு சில உன்நிறத்திற்கும் மாறியிருக்கின்றன."

"ஏரிக்குள் அகப்பட்டதையெல்லாம் விழுங்கியிருக்கிறாய் போல, எப்படி வீங்கிக் கொழுத்திருக்கிறாய் பார்"

பார்வைப் புலம்: வெட்டுக்கிளியாகத் தெறித்துப் பாய்ந்து கொண்டிருந்தவர்களின் வெளிக்குள் சொற்கள் இரண்டும் பிரவேசித்ததும், அவைகளும் சேர்ந்து துள்ளத்துவங்குகின்றன. அச்சொற்களின் இணைவால் அவர்களின் பாய்தல் கோலங்கள் குழம்பி, புதுக்கோலமெடுக்கிறது. சிலர் பாய்வதை நிறுத்தி நகர்கின்றனர். அங்கே காற்றைக் கிழித்துக்கொண்டு வந்த பறவை இமைக்கா நொடியில் கொழுத்திருந்த சொல்லைக் காலிடுவலுக்குள் கவ்விச் செல்கிறது. அதனைக் கொண்டு மலையுச்சியிலிருக்கும் தன் கூட்டில் விரிசலாகியிருந்த இடவை அடைக்கப் பின்னிவிட்டுப் பறக்கிறது. பாவம் அச்சொல்.

கேள்விப் புலம்:

"கொழுகொழுவென்று இருக்கிங்க. ஆனால் உங்களிடமிருந்து எந்தக் கதகதப்பும் தாவவில்லையே"

"அப்பறவைதான் என்னை தூக்கிவந்து இப்படிச் செய்துவிட்டது. ஆனால், இந்த இடம் எனக்குப் பிடித்திருக்கிறது."

"அது பறவையல்ல; ஒரு சிந்திப்பு."

"அது எதற்காக ஒன்றைக் கொண்டுவரப் போவதாக சொல்லுமோ, அது கொண்டு வந்து வைக்கும் எதுவும் எப்பொழுதும் அப்படியே செய்து கொண்டிருப்பதில்லை..."

"உங்களைப் போல"

"என்ன சொல்ல வருகிறாய்"

"குழம்பிப் போக வேண்டாம். நாம் பிரதிக்குள் இருக்கிறோம்."

◉ ◉ ◉ ◉ ◉ ◉

குழியலறைக்குள்ளிருந்து திரும்பியவள், நேராகப் பெட்டிக்குச் சென்று அதனருகிலிருந்த helmet இனை மாட்டிக் கொள்கிறாள். பின் பெட்டியைத் தூக்க, உள்ளே எதோ விழும் சத்ததிற்கு காது

கொடுத்து, அதன் பாரத்தினை மேலும் கீழுமாக தூக்கி எடை போட்டுப் பார்த்தவாறு என்னை முறைக்கிறாள். நான் எப்படி எழுதுகிறேனெனக் கேட்டாயே.. நீ கொண்டு வந்திருக்கும் Boxஐயும் Helmetஐயும் வைத்து இப்படித்தான் எழுதிப் பார்ப்பேன் என யோசித்துக் கொண்டிருந்ததைச் சொல்வதற்கு முன், அவளிடம் அவ்விரு சொற்களையும் கிசுகிசுத்துப் பார்க்கிறேன்.

25.

## மரி எனும் இன்னொரு பெண்

'அற்புத மரிக்கு' டி.சி. கொடுத்து பாடசாலையை விட்டே அனுப்பிவிடலாம் எனும் யோசனையில் அவளுக்கு எதிரான ஆதாரங்களையும் குற்றச்சாட்டுக்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார் எச்.எம். அப்பொழுதுதான் நம்ம தமிழ் வாத்தி எச்.எம் இன் அறைக்குள் நுழைந்திருக்கிறார். அவரது அலுவலகம் வரை தான் வந்தது ஏனென ஒரு ஃபொமாலிட்டிக்காகவாவது தமிழ் வாத்தியிடம் கேட்காமல், அற்புத மரிக்கு டி.சி கொடுக்கும் யோசனையையும் அதற்கான குற்றச் சாட்டுகளைப் பட்டியலிடவும் விவாதிக்கவும் ஆரம்பித்தார். அப்படி தமிழ் வாத்தியுடன் செய்து கொள்வது தனது யோசனைக்கான நியாயத்தினை வலுவாக்கிக் கொள்ளலாமென எச்.எம் நினைத்திருக்கலாம்.

தமிழ் வாத்தியார் மரியின் மீது கழிவிரக்கம் கொண்டிருந்தவர். அவள் குடும்ப ரீதியாகவோ வேறு எதனாலோ நியாயமாகப் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் தான் இப்படி வினோதமாக நடந்து கொள்கிறாள் என உறுதியாக நம்புபவர். இருந்தும், அற்புத மரிக்கு டி.சி. கொடுக்கும் விசயத்தில் எச்.எம்.இன் தரப்பை ஓம்; சரிதான் என்பது போல் குற்றச்சாட்டை துவக்கிவைத்தது நம்ம தமிழ் வாத்திதான்.

1. "ஆமாம். அப்பப்போ இஷ்டப்பட்டால், ஏதோ எனக்கு தயவு பண்ணுகிற மாதிரி கிளாசுக்கு வரும். போகும்." — தமிழ் வாத்தி

"உம். நீரே சொல்கிறீர் பாரும்." என்று சொல்லிவிட்டு இரண்டாள் சேர்ந்து தூக்க வேண்டிய வருகைப் பதிவு ரிஜிஸ்டரையும், இன்னும் இரண்டு மூன்று ஃபைலையும் தூக்கி தமிழ் வாத்தியின் முன் போட்டார்.

"பாரும். நீரே பாரும். போன ஆறு மாச காலத்திலே எண்ணிப் பன்னிரண்டே நாள் தான் ஸ்கூலுக்கு வந்திருக்கிறாள். வீட்டுக்கும் மாசம் ஒரு கடிதம் எழுதிப் போட்டுக் கொண்டுதான் இருக்கேன். ஒரு பூச்சி, புழு இப்படி எட்டிப் பார்த்து, அந்த கடுதாசி போட்ட கம்மனாட்டி யாருன்னு கேட்டுச்சா? ஊகூம். சர்தான் போடா நீயுமாச்சு

உன் கடுதாசியுமாச்சுன்னு இருக்கா அவள். சரி ஏதாச்சும் மெடிக்கல் சர்டிபிகேட் கேட்டு வாங்கிச் சேர்த்துக்கலாம்னா, வந்தால்ல தேவலாம். நம்ம டி.இ.ஓ மாதிரியில்ல ஸ்கூலுக்கு இஷ்டப்பட்டால் வருகிறாள்.

2. வந்தாலும் ஸ்டூடண்ட் மாதிரியா வர்றாள்? சேஞ்சேஞ்சேஞ் என் வாயாலே அத எப்படிச் சொல்றது? ஒரு பிரஞ்சு சைக்கிள்ளே, கன்னுக்குட்டி மேலே உட்கார்ந்து வர்ற மாதிரி பாண்ட் போட்டுக் கொண்டு வர்றாள். பாண்டுங்காணும்ஞ் பாண்ட்! என்ன மாதிரி பாண்ட்டுங்கறீர்? அப்படியே 'சிக்'குன்னு பிடிச்சிக்கிட்டு, போட்டோவுக்கு சட்டம் போட்ட மாதிரி, அதது பட்பட்டுன்னு தெறிச்சுடுமோன்னு நமக்கெல்லாம் பீதியை ஏற்படுத்தற மாதிரி டிரஸ் பண்ணிட்டு வர்றாள். சட்டை போடறாளே, மேலே என்னத்துகுங்காணும் இரண்டு பட்டனை அவுத்துவிட்டுட்டு வர்றது? அது மேலே சீயான்பாம்பு மாதிரி ஒரு செயின். காத்தாடி வால் மாதிரி அது அங்கிட்டும் இங்கிட்டும் வளைஞ்சு வளைஞ்சு ஆடறது. கூட இத்தினி பசங்க படிக்கறாங்களேன்னு கொஞ்சமாச்சும் உடம்பிலே வெக்கம் வேணாம்?

அந்த பொண்ணு பாவம் சார்; அவள் மனோநிலை அதிகம் பாதிக்கப்பட்டிருக்கலாம் சார் என எச்.எம்மிடம் தமிழ் வாத்தி அற்புத மரிக்காக பரிந்து பேச நினைத்திருக்கக் கூடும். ஆனால், அவள் மீதான குற்றச்சாட்டினை எச்.எம். சரித்து விட்டுக்கொண்டிருக்கும் பொழுது, அவர் சேர்த்துக் கொண்ட சில வசனங்கள் அப்படி பரிந்து பேசுவதற்கான வாய்ப்பையும் சிக்கலாக்கி விட்டது.

"இந்த இழவெடுத்த ஸ்கூல்லே ஒரு யூனிபார்ம், ஒரு ஒழுங்கு, ஒரு மண்ணாங்கட்டி, ஒரு தெருப்புழுதி ஒன்றும் கிடையாது. எனக்கு தெரியுங்காணும்ஞ் நீர் அதையெல்லாம் ரசிச்சிருப்பீர்!"

"சார்ஞ்"

"ஒய் சும்மா இருங்காணும். நாப்பது வருஷம் இதுல குப்பை கொட்டியாச்சு. ஐ நோ ஹ்யூமன் சைக்காலஜி மிஸ்டல் டமிள்! தமிழ்சார், எனக்கு மனத்தத்துவம் தெரியும்பா. உமக்கு என்ன வயசு?"

"இருபத்தொன்பது சார்!"

"என் சர்வீஸே நாற்பது வருஷம்."

இப்படியெல்லாம் எச்.எம். பேசுவார் என்று நம்ம தமிழ் வாத்தி நினைத்தா இருந்தார். நேரடியாக அவளுக்குப் பரிந்து பேசினால் தன்னை அசடு வழிபவனாக்கிவிடும் என்பதைப் புரிந்து கொண்டவர், ஸ்கூல் சட்டத்தினைக் கொஞ்சம் இழுத்துப் பார்த்தார்.

"பாண்ட் , சட்டை போடக்கூடாதுன்னு விதி ஒன்னும் நம்ம ஸ்கூல்ல இல்லையே சார்."

"அதுக்காக, அவுத்துப் போட்டுட்டும் போகலாம்னு விதி இருக்கா என்ன? வயசு பதினெட்டு ஆகுதுங்காணும் அவளிக்கு! கோட்டடிச்சு கோட்டடிச்சு இப்பத்தான் டெந்த்துக்கு வந்திருக்கிறாள். எங்க காலத்துல பதினெட்டு வயசுல இடுப்பிலே ஒண்ணு, தோள்லே ஒண்ணு இருக்கும். போதாக்குறைக்கு மாங்காயைக் கடிச்சிட்டு இருப்பாளுக."

அவளின் மீதிருந்த கோபத்தில் எச்.எம். பெண்கள் என்றால் எப்படி இருக்க வேண்டுமென உதாரணம் காட்டிய விசயம் நம்ம தமிழ் வாத்தியை திகைக்கச் செய்தது. இந்த மனிசன் அதுவும் எச்.எம் போஸ்ட்டில் இருந்துகொண்டு, பெண்கள் என்றால் பதினஞ்சி பதினாறு வயசிலயே புள்ளகுட்டிகள பெத்துத் தள்ளுற மெசினா இருக்கனுமென நியாயிக்கிறானே செய்க்க்.. என்றானது. அவளுக்காக அவரிடம் பேசுவது முட்டையில் மயிர் பிடுங்கும் கதைதான் என மனதுக்குள் தலையாட்டிக் கொண்டார். எச்.எம்மோ விடுவதாயில்லை. அவள் மீதான குற்றச்சாட்டுக்களை மேலும் இழுத்துவிட்டார்.

3. "போன மாசத்திலே ஒரு நாள் போனாப் போவுதுன்னு நம்ம மேலே இரக்கப்பட்டு ஸ்கூலுக்கு வந்தாளே அப்போ, அவள் ஒரு நாள்லே, ஆறு மணி நேரத்துக்குள்ளாறே–ஹார்ட்லி ஸிக்ஸ் அவர்ஸ் சார்– என்ன என்ன பண்ணி இருக்காள் தெரியுமா? யாரோ நாலு தடிக்கழுதைகளோட – நீங்கள்ளாம் ரொம்ப கௌரவமா சொல்லிப்பேளே பிரண்ட்ஸ் அப்படீன்னு – நாலு தடிக்கழுதைங்களோட ஸ்கூல் வாசல்லே சிரிச்சு பேசிட்டு இருந்திருக்காள். நம்ம ஹிஸ்டரி மகாதேவன் இருக்கேஞ் அது ஒரு அசடு. நம்ம ஸ்கூல் வாசல்லே, நம்ம ஸ்டூடண்ட் இப்படி மிஸ்பிஹேவ் பண்ணறாளேன்னு அவ கிட்ட போய் "இப்படி எல்லாம் பண்ணக்கூடாது அற்புத மரி, உள்ள வான்னு கூப்பிட்டு இருக்கான். அவள் என்ன சொன்னாள் தெரியுமா?"

"சொல்லுங்க சார்"

"உங்களுக்கு பொறாமையா இருக்கா சார்ன்னு கேட்டுட்டாள். அந்தப்பசங்க முன்னால வெச்சு மனுஷன் கண்ணாலே ஜலம் விட்டுட்டு என்கிட்டே சொல்லி அழுதார். இந்த ஸ்கூல் காம்பசுக்குள்ளே நடக்கிறதுக்குதான் நீங்க பொறுப்பு. வெளியிலே நடக்கிற விவகாரத்துக்கெல்லாம் நீங்க என்னைக் கட்டுப்படுத்த முடியாது சார்னு மூஞ்சியிலே அடிச்ச மாதிரி சொல்றாள். யாருகிட்டே? இந்த நரசிம்மன்கிட்டே."

4. "இந்த அநியாயம் இத்தோடு போகலே. சாயங்காலம், பி.டி. மாஸ்டர்கிட்டே சண்டை போட்டுக்கொண்டாள். அவன் இப்படிப் பண்ணப்படாது, இப்படி வளையணும், இந்த மாதிரி கையை வச்சுக்கணும்னு அவளைத் தொட்டுச் சொல்லிக்கொடுத்திருக்கான். தொட்டவன், எசகுபிசகா எங்கேயோ தொட்டுட்டான் போலிருக்கு. இவ என்ன கேட்டிருக்கா தெரியுமாஞ்? சார்... உங்க பொண்டாட்டியோட நீங்க படுக்கறது இல்லையான்னு கேட்டுவிட்டாள். பாவம்! நம்ம பி.டி. பத்மநாபன் லீவு போட்டு விட்டு போய்விட்டான்.

அற்புத மரி பற்றிச் சொல்லும் பொழுதெல்லாம் எச்.எம்மின் இரத்தம் கொதித்தெழுந்து மூக்கில் முட்டி முட்டித் திரும்பியது. என்னதான் இருந்தாலும் மரியின் மீதான கழிவிரக்கம் தமிழ் வாத்தியிடமிருந்து மெல்ல நழுவி மேசையில் இறங்கியது. "இப்போ போய் டி.சி. கொடுத்துட்டால், அவள் எஸ்.எஸ்.எல்.சி. எழுத முடியாமல் போயிடும் சார். அவள் வாழ்க்கை வீணாகப் போய்விடும்." அதற்கு எச்.எம் முத்தாய்ப்பாய் "அந்தக் கழுதைக்கே அதைப் பத்திக் கவலை இல்லை. உமக்கெதுக்கு?" எனச் சொல்லி மேசையில் கிடந்த தமிழ் வாத்தியின் கழிவிரக்கத்தைத் தட்டி விட்டார்.

◉◉

நமக்கெதுக்கு என்று தமிழ் வாத்தியால் விட்டுவிட முடியவில்லை. அது அவர் சுபாவமும் இல்லையே. அவள் அப்படி என்ன பெரும் பாவங்களையா செய்தாள். அவள் அப்படி வித்தியாசமாக நடந்து கொள்வது சரியில்லைதானென ஒரு பக்கம் ஏற்றுக் கொண்டாலும், அவள் மனதளவில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதும்

தனது யோக்கிய நிலையை வைத்துப் பார்த்தால் எப்படியானாலும் அவளை மன்னித்து விடலாம் என்பது இன்னொரு பக்கமாய் அவரின் மனதில் பெரிதாய்ப் பாரித்தது. அவள் செய்யும் பாவத்திற்காகக் கல்லெறிந்து கொல்ல நான் என்ன அப்பழுக்கற்ற யோக்கியனா என தனக்குள் வெந்து கொண்டார்.

அப்பழுக்கற்ற யோக்கியன் எவனும் இவ்வுலகில் இருக்க முடியாதென்பது அவரின் அசைக்க முடியாத நிலைப்பாடு. அப்படி எவனாவது இருந்தால் அற்புத மரியை கல்லெறிந்து கொல்ல அவருக்கு இசைவுதான்.

அவள் பற்றி தமிழ் வாத்தி தனது மனைவி சுமதியிடம் சொன்னார். நீங்கள் எதற்காக அந்தப் பொண்ணைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்கிறீர்கள். அவள் இஸ்டம் என்னமோ செய்து கொள்கிறாள். அவள் ஆசை. அவள் பாடு. விட்டுவிடுங்களென சுமதி சொன்னதும் வாத்திக்கு கொஞ்சம் ஏறியது. அடக்கிக் கொண்டு "உனக்கு ஒன்றும் தெரியாது சுமதி. அவள் பாவம். மனதளவில் பாதிக்கப்பட்டிருப்பாள். அதனால் தான் இப்படி நடந்து கொள்கிறாள். இருந்துதான் பாரன், அதனை நீயே புரிந்து கொள்வாய். அவளை நல்ல பெண்ணாக மாற்றிக் காட்டத்தான் போகிறேன்" என சுமதியிடம் சவாலிட்டார். சுமதியிடமிருந்து அதையும் தான் பார்போமெனச் சொல்லும் ஒரு நகைப்பு கசிந்து அவரைச் சுற்றி மிதந்தது.

அன்று சாயங்காலமே சுமதியை அழைத்துக் கொண்டு மரியின் வீட்டுக்குப் போனார். ரயில் நிலையத்துக்கு எதிரே இருந்த வரிசை வீடுகளில், திண்ணை வைத்த, முன்பகுதி ஓடு போட்டு, பின் பகுதி ஒட்டிய பழங்காலத்து வீடு அவளுடையது. விளக்கு வைத்த நேரம். திண்ணை புழுதி படிந்து, பெருக்கி வாரப்படாமல் கிடந்தது. உள்ளே விலை மதிப்புள்ள நாற்காலிகள் சோபாக்கள் இருந்தன. ஆனாலும் எந்த ஒழுங்கும் இன்றிக் கல்யாண வீடு மாதிரி இரைந்து கிடந்தன. மூன்று முறை அழைத்த பிறகு யாரெனக் கேட்டுக் கொண்டு கலைந்த தலையும், தூங்கி எழுந்த உடைச் சுருக்கங்களோடும், சட்டையும் கைலியுமாக வெளிப்பட்டாள் மரி. இருவரும் தனது வீடு வரை வந்த ஆச்சரியத்தை முகத்தில் காட்டிக் கொண்டே நாற்காலியை இழுத்து அவர்களை உட்காரச் சொன்னவள்,

"நீங்க எப்படி இங்கே..?"

“சும்மாத்தான். பீச்சுக்குப் போய்க்கிட்டு இருந்தோம். வழியிலே தானே உங்க வீடு. பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு நுழைஞ்சிட்டோம். அழையாத விருந்தாளி. உடம்பு சரியில்லையா?”

"தைலம் வாசனை வருதா சார்? லேசாத் தலைவலி. ஏதாச்சும் சாப்பிடறீங்களா சார்?”

“எல்லாம் ஆச்சு. வீட்டிலே யாரும் இல்லையா?” கேட்டு விட்டு அவளை அனுதாபக் கண்களோடு பார்த்தார். தனது குடும்பம் குறித்த கவலைகளை, ஏக்கத்தைத் தான் சொல்லப் போகிறாள். சுமதியும் இவளின் மீது பரிதாபப் படத்தான் போகிறாளென எதிர்பார்த்திருந்தார்.

“யாரும் இல்ல சார். அப்பாக்கு அதிகம் கொமிட்மன்ட்டான குடும்ப வாழ்க்க பிடிக்கலன்டு எப்பவோ போயிட்டார். அம்மாக்கு இன்னொரு துணை தேவையா இருந்திச்சி. இன்னொருத்தர கல்யாணம் பண்ணிக்கிடாங்க. மாசத்துக்கு ஒருக்கா இல்லன்னா ரெண்டு தரம் இங்க வருவாங்க. வீடெல்லாம் கிளீன் பண்ணி தருவாங்க. அண்டக்கி மட்டும் வீட்டு சமயல். ருசியா இருக்கும். மத்த நேரமெல்லாம் கட சாப்பாடுதான். ஆனா பரவல்ல. நான் சமைப்பதைவிட பெட்டர் தான்.”

“அம்மா கூட இல்லாதது கவலையா இல்லையா”

அப்படி கேட்டதும் அவள் சிறிது மௌனித்து யோசித்தாள். தமிழ் வாத்திக்கோ இதோ நான் எதிர்பார்த்திருந்த மணி அடித்துவிடுமென மனதின் விளிம்பிலிருந்து சுமதியை எட்டிப் பார்த்துத் திரும்பினார்.

“அப்படி சொல்றத்துக்கு இல்ல சார். அவங்க டெய்லி வந்து சுத்தம் பண்னித் தந்தா நல்லா இருக்கும் எண்டு தோணும். ஆனா, அவங்க கூடவே இருந்தா என் இஸ்டத்துக்கு ஜாலியா இருக்க ஏலா எண்டும் தோணும். அதனால அவங்க இல்லாதத பத்தி அவ்வளவு அலட்டிக் கொள்றதில்லை”

அவளின் பதில் விளிம்பிலிருந்தவரை குப்பறத் தள்ளி விட்டது. அக்கணம் அவரால் அடுத்து எதுவும் பேச முடியவில்லை. சுமதியையும் எதிர்கொள்ள முடியவில்லை. ஓர் இறுக்கமான மௌனம் அங்கு கவிந்தது. கவனத்தை வேறு திசையில் ஓட்ட, சாவி கொடுக்காமல் எப்போதோ நின்று போயிருக்கும் கடிகாரம்

இருக்கிறதாவென நைசாகப் பார்க்க ஆரம்பித்தார். நிலமையைப் புரிந்து கொண்ட சுமதி கவிந்திருந்த மௌனத்தைக் கலைத்து, மரியை தங்களுடன் பீச்சுக்குப் போக அழைத்தாள். சுமதிக்கு மரியை பிடித்திருந்தது. தமிழ் வாத்தியும் வா என்றார்.

"இதோ வந்துவிட்டேன் சார்," என்று துள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள்.

சுமதி தமிழ் வாத்தியைப் பார்த்தாள்.

"பாவம்மா, இந்தப் பொண்ணு. அவள்ள சோகத்த அவளுக்குள்ளேயே தெரியாம பதுக்கி வெச்சு இருக்காள்" என்றார். சுமதியும் அப்படியா எனும் படியாக பார்த்து முடிப்பதற்கும் மரி ரெடியாகி வரவும் சரியாக இருந்தது.

பேண்ட்தான் போட்டிருந்தாள். சட்டையை டக் பண்ணியிருந்தாள். அழகாகவே இருந்தது அந்த உடை. உடம்புக்குச் சௌகரியமானதும், பொருத்தமானதும்தானே உடை.

"ஸ்மார்ட்!" என்றார்..

"தேங்க்யூ சார்," என்றாள், பரவசமான சிரிப்பில்.

கடற்கரையை அடைந்தோம். கடற்கரை சந்தோஷமாக இருந்தது. ஓடிப் பிடித்துக் கல்குதிரைகளின் மேல் உட்கார்ந்து விளையாடும் குழந்தைகள். குழந்தைகள் விளையாட்டைப் பார்த்து ரசிக்கும் பெற்றோர்கள். உலகத்துக்கு ஜீவன் சேர்க்கும் யுவர்களும் யுவதிகளும். கடல் மணலில் கடலைகள் சுகமாக வறுபட்டன. குழந்தைகள் வாழ்வில் புதிய வர்ணங்களைச் சேர்த்துப் பலூன்கள் பறந்தன. ஸ்டூல் போட்டுப் பட்டாணி சுண்டல் விற்கும் ஐயரிடம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயம் மறுபடியும் குறித்த விசயத்தை வெளியே இழுத்தெடுக்க மரியிடம் தூண்டலை எறிய நினைத்தார்.

உங்க அம்மா கூட நீ பீச்சுக்கு வர்ரதில்லையா எனத் துவங்கினார். பட்டானியை வானத்தில் பறக்க வைத்து அதனை லாவகமாகக் கவ்வி சாப்பிட்டு கொண்டிருந்தவளிடம் மேலும் கவ்வ வானில் பட்டானி தீர்ந்திருந்தது. அவர் கேட்டது அவள் காதில் விழவில்லை. "கார வடை வாங்கிக் கொடுங்க சார்," என்றாள் மரி. கொடுத்தார். மீண்டும் அவளின் இரை வானில் பறந்தது.

''மத்தியானம் சாப்பிடல்லே சார். சோம்பேறித்தனமாக இருந்துச்சு. தூங்கிட்டேன்.'' என்றாள்.

''ராத்திரி எங்களோடுதான் நீ சாப்பிடறே,'' என்றாள் சுமதி.

''இருக்கட்டுங்க்கா.''

''என்ன இருக்கட்டும். நீ வர்றே.''

வரும்போது, சுமதியின் விரல்களில் தன் விரல்களைக் கோர்த்துக்கொண்டு பேசிக் கொண்டு வந்தாள். பேச்சின் இடையே, என்கூட பேச பழக பிடிச்சிருக்காக்காவென சுமதியிடம் கேட்டாள். சுமதியும் உனக்கென்னடா.. நீ செய்ற குறும்பெல்லாம் எனக்குப் பிடிச்சிருக்கென தன்னுடன் சேர்த்து அவளின் கையை இறுகப் பிடித்தாள். இந்த சந்தர்பத்திற்காக காத்திருந்த தமிழ்வாத்தி. அவளின் பக்கமாய்த் திரும்பி, ''நீ யென்னமா பண்ணுவாய். பாவம் நீ. உன் இடத்தில் சூழ்நிலையில் யாரிருந்தாலும் அப்படித்தான் செய்வார்கள்'' என எறிந்த தூண்டிலை இழுத்துப் பார்த்தார்.

''நான் என்ன யாருக்கும் அநியாயமா சார் பன்றன். குற்றமொன்றும் செய்யலயே. மத்த பொன்னுங்க மாதிரி, மத்தவங்க எதிர்பாக்குற மாதிரி இல்ல. அவ்ளவும் தானே. வித்தியாசமா இருக்கிறது தப்பில்லையே சார்.'' பேசி முடிக்கும் பொழுது அவள் கண்கள் கலங்கியிருந்தது. அதனைப் பார்த்துவிட்ட சுமதி கொஞ்சம் சும்மா வாங்க என ரகசியமாக தமிழ் வாத்தியை கண்களால் மிரட்டினாள். தன்னுடன் மரியை அணைத்துக் கொண்டே வீடு வந்தாள். தமிழ் வாத்திக்கோ மரியின் அவ்வார்த்தைக்கும் அழுகைக்கும் பின்னால் தான் நினைத்ததுதான் இருக்குமென நம்பிக்கை துளிர்த்தது. ஆனால், சுமதி இது குறித்தெல்லாம் யோசிக்காமல் மரியினை அப்படியே ஏற்றுக் கொண்டாள்.

சாம்பாரும் கத்தரிக்காய் கறியும்தான். மத்தியானம் வறுத்த நெத்திலிக் கருவாடு இருந்தது. ''தூள்க்கா.... தூள்! இந்தச் சாம்பாரும் நெத்திலிக் கருவாடும் பயங்கரமான காம்பினேஷங்க்கா,'' என்றாள் மரி.

மரி இப்போதெல்லாம் காலையும் மாலையும் தவறாமல் இவர்களின் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். காலை இட்டிலி இவர் வீட்டில்தான். வருஷம் 365 நாட்களும் எங்கள்

வீட்டில் இட்டிலி அல்லது தோசைதான். ஆட்டுக்கல்லை ஒளித்து வைத்து விட்டால், சுமதிக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துவிடும் மரி, என்பார். மரி விழுந்து புரண்டு சிரிப்பாள். சாயங்காலங்களில் அவர் வீட்டில்தான் அவள் வாழ்க்கை கழிந்தது. பேண்ட் போட்ட அந்தப்பெண், சிரமப்பட்டுச் சம்மணம் போட்டு உட்கார்ந்து சுமதிக்கு வெங்காயம் நறுக்கித் தருவதைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்.

"ஏம்மா... சைக்கிள்ளே ஊரைச் சுற்றுகிற பெண் நீ. இங்கே இவளுக்கு வெங்காயம் நறுக்கித் தர்றியே?" என்றார்.

"இதுதான் சார் த்ரில்லிங்கா இருக்கு. கண்ணிலே நீர் சுரக்கச் சுரக்க வெங்காயம் நறுக்கிறது பயங்கரமான எக்ஸ்பீரியன்ஸ்." என்றாள்.

"சார், ஒண்ணு சொல்லட்டுமா?"

"ஊகூம். ரெண்டு மூணு சொல்லு."

"சீரியஸாகக் கேட்கிறேன், சார். நான் இங்கே வந்து போறதிலே உங்களுக்குத் தொந்தரவு இல்லையே சார்?"

"ஏய் ஏன்டீ அப்டியெல்லாம் பேசுறாய். உன்ன ரொம்ப பிடிச்சிதான் உன்னோட இருக்கம்" என அக்கறைக் கோபம் சுமதியிடமிருந்து அவசரமாகத் துள்ளி அடங்கியது.

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்துவிட்டு அவள் சொன்னாள்.

"ஏன் சார் – கெட்டுப் போனவள்னு எல்லோரும் சொல்கிற என்னை எதுக்கு உங்க வீட்டிலே சேர்த்து, சோறும் போடுறீங்க?"

தமிழ் வாத்திக்கு சிரிப்புத்தான் வந்தது.

"பைத்தியமே! உலகத்திலே யார் தான் கெட்டுப் போனவங்க? யாராலுமே கெட முடியாது, தெரியுமா? மனசுக்குள்ளே நீ கெட்டுப் போனவள்னு நினைக்கிறியாக்கும்? அதை விட்டுடு. நீயும் கெட்டவள் இல்லை, உங்க அம்மாவும், அப்பாவும் யாருமே கெட்டவங்க இல்லே." என சொல்லி அவள் மனம் திறந்து பேச இடமமைத்தார்.

எங்க அம்மாவைப் பழி தீர்க்கணும்னுதான் அப்படியெல்லாம் நடந்துக்கறேன் சார் என அவள் சொல்வாள், அதற்கு பதிலாய்

“எனக்கும் தெரியும்.” என சொல்லலாமென தமிழ் வாத்தி மனதுக்குள் ஒரு ரிஹேசல் பார்த்துக் கொண்டார்.

ஆனால், மரியின் மௌனத்திற்குள்ளிருந்து “சரி தான் சார், கடைகள்ள விக்கிற ஃபுட் அய்டம் இல்லையே சார் நானு.. கெட்டுப் போறத்துக்கு” ஒரு விசும்பல் மட்டுமே வெளிப்பட்டது.

ஒரு நாள் மரி அவரிடம் கேட்டாள்.

"சார்.. நான் ஸ்கூலுக்கு வர்றதே இல்லைன்னு நீங்க ஏன் கேட்கவில்லை?"

அவர் அவள் முகத்தை ரகசியமாகக் குனிந்து பார்த்தார். அவள் கண்களில் இரண்டு மணிகள் உருண்டு விழத்தயாராய் இருப்பதாகத் தோன்றியது.

அவர் மனம் மறுபடியும் இன்னொரு ரிஹேசல் செய்து பார்த்தது,

“என்னை நீங்க கேட்டிருக்கணும் சார். ஏண்டி ஸ்கூலுக்கு வரலைன்னு என்னை அறைஞ்சு கேட்கணும் சார். அப்படி யாரும் என்னைக் கேட்க இல்லேங்கறதுனாலதானே நான் இப்படி விட்டேத்தியா இருக்கேன்? என் மேல் இப்படி யாரும் அன்பு செலுத்தினது இல்லே சார். அன்பு செலுத்தறவங்களுக்குத்தானே அதட்டிக் கேக்கவும் அதிகாரம் இருக்கு?”

என அவள் சொல்வதாகவும்

“உனக்கே அது தோணனும்னுதானே நான் காத்திருக்கேன். அதனாலே என்ன? ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. இன்னைக்குப் புதுசா ஆரம்பிப்போம். இன்னைக்குத்தான் டென்த் கிளாஸ்லே நீ சேர்ந்தன்னு வச்சுக்க. நாளையிலேர்ந்து நாம் ஸ்கூலுக்குப் போறோம்.” என அன்பை அவிழ்த்து விடுவதாகவும் மனதில் ஓட்டிப் பார்த்துக் கொண்டார்.

தூரத்திலிருந்தே அவர் அப்படி என்ன ரிஹேசல் பார்க்கிறார் என்பதை சுமதி துல்லியமாக ஊகித்திருந்தாள். அவளால் அப்படி ஊகிக்க முடியுமென தமிழ் வாத்திக்கும் தெரியும்.

“மத்த பசங்க கிட்ட போய், நீங்க எல்லாம் ஏன் இப்டி நடந்து

கொள்றீங்க எண்டு எந்த வாத்தியும் கேக்குறதில்ல. எங்கிட்ட மட்டும் எல்லாரும் கேக்குறாங்க. நான் வித்தியாசமா இருக்குறத்துக்கு, எனக்கு பிடிச்ச மாதிரி நடந்து கொள்றத்துக்கு எல்லாம் காரணம் வேணுமா சார். எனக்கு பிடிச்சிருக்கு இந்த ட்ரெஸ்ஸ போடுரன். பிடிச்சிருக்கு ஃப்ரென்ட்ஸ் கூட பேசுரன். அநியாயத்த சுடுர மாதிரி தட்டிக் கேக்குறன். இப்படித்தான் சார் நான்... இப்பிடி திமிரா இருக்காள்; இவள எப்படி மன்னிக்கிறது எண்டு கேக்குறாங்க. அவங்க எல்லாம் என்ன மன்னிச்சி ஏற்றுக் கொள்றத்துக்கு மாதிரி வேற என்னதான் சொல்றது சார்.. ஸ்கூலுக்கு போகவே பிடிக்கல சார்" என விசும்ப ஆரம்பித்தாள் மரி.

அருகில் சென்று அவள் தலையை தடவிக் கொடுத்தவர், அவங்க ஏற்றுக் கொள்ற மாதிரி ஒண்ட சொல்லித் தாரன். பொய்தான். இருந்தாலும் அவர்களிடம் இப்படிச் சொல்லு ஏற்றுக் கொள்வார்கள். என தனது மனதில் இத்தனை நாள் அவளுக்காக யோசித்திருந்தவைகளைச் சொன்னார்.

சற்றுத் தள்ளி இருந்தவாறே சுமதி மனதிற்குள் உறுண்டு விழுந்து சிரிக்கத் துவங்கினாள். சுமதியை நோக்கி புன்னகைத்த வாறே அவர் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தாள் அற்புத மரி.

குறிப்பு: இப்பிரதி, பிரபஞ்சனின் 'மறி எனும் ஆட்டுக்குட்டி' கதைப் பிரதியை பிரதான ஊடிளைப் பிரதியாக (intertexuality) பாவித்து வடிவமைக்கப்பட்டிருக்கிறது. கூகிள் செய்தால் அக்கதைப் பிரதி நொடியில் கிடைத்துவிடுகிறது.

26.

**நூலறுந்து சாத்தியமாகும் ஜாலங்கள்.**

அவர்கள் குறித்ததொரு லாவகத்தில் பட்டம் விட்டுக் காட்டியே பயில்வான்களாய் ஆனவர்கள். இவ்வரிக்குள் உருவாக்கப்பட்டிருக்கும் சுவர்மீது தங்களின் 'குத்திட்ட குடிமியில் பட்டம்விடும்' புகைப்படங்களை ஃப்ரேம் பண்ணிக் கொளுவி வைத்திருக்கிறார்கள். அந்த லாவகத்தைப் பயின்று பட்டம் விட்டுக் காட்ட நாங்களும் பயில்வான்களாக முடியுமா என வெள்ளந்தியாகக் கேட்டால், அயம் ரியலி சாரி. அதயும் தாண்டி அவர்களுக்குத் தெரிந்திருக்கும் மர்ம குஸ்திகளை நீங்களும் அறிந்திருக்க வேண்டும்.

அதோ, நூல் குவளையும் கையுமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குவளை நூல்களிலேயே அதிஉயரப் பட்டங்கள் பறந்து கொண்டிருந்தன. எப்படிக் காற்றடித்தாலும் மர்ம குஸ்திகளைப் பிரயோகித்து லாவகம் பிசகாமல் பட்டத்தை நிறுத்திக் காட்டினார்கள். பட்டம் உச்சியை அடைந்ததும் கையிலிருக்கும் நூலின் தொங்கலைத் தங்களின் நீண்ட தலைமுடிகளில் கட்டிக் கொண்டு செல்ஃபி எடுப்பார்கள். முகமும் முடியிலிருந்து நீளும் பட்டமும் தெரியக்கூடிய செல்ஃபியா, உடனே ஃப்ரேம் பண்ணி புதிய காவியமாய் வர்ணித்து சுவரில் மாட்டி விடுவார்கள்.

சுவரிற்கு வந்தால் புனிதமடைந்துவிடும். புனித புகைப்படங்களை உங்களின் போக்கிற்கு பார்க்க முடியாது. பட்டம்விடும் லாவகத்தின் அரிச்சுவடியாவது தெரிந்திருக்க வேண்டும். அதைவிடப் பிரதானம், குறித்த முறைப்படியே பார்க்க வேண்டும். முகம்->தலை-> குத்திட்டு நீளும் முடிக்கற்றை பின் நூலிலிருந்து ஏறிச் சென்று பட்டம் என்பதாக.

அன்று பின்னேரப் பொழுதொன்றில் பயில்வான்கள் கூடிப் பட்டம் விட்டுக்கொண்டிருந்த பகுதிக்கு வந்த குழந்தை, தன் பட்டத்தையும் விளையாட்டாய் விட, அது கிறுகிறு வானமிட்டுத் திமிறுவதைப் பார்த்ததும் நூலை அறுத்துவிட்டாள். அது பயில்வான்களின் பட்டங்களையும் தாண்டிப் பறந்து ஒவ்வொருவருக்கும் விதவிதமாய் ஜாலங்கள் காட்டிக் கொண்டிருக்க, இவ்வளவு

நேரமாய் என் பேனாவின் மைக்குள் ஒளிந்து கொண்டிருந்த பி.ந.கு வெளிவந்து குழந்தையின் அப்படத்தை தன் கேமராவில் கிளிக் செய்துகாட்டி அவளை உற்சாகமூட்டிவிடுகிறார். அவளோ திடுமென இப்பிரதியின் முதல் பந்திக்குத் தாவி அச்சுவரினை நெருங்குகிறாள். அங்கு பயில்வான்களின் மயிர்களில் சிக்கிக் கிடந்த நூல்களை அறுத்துவிட்டு ஃப்ரேம்களுக்குள்ளிருந்து வெளியேறும் ஒவ்வொன்றின் பறத்தல்களையும் வெவ்வேறு கோணங்களில் கிளிக் செய்ய ஆரம்பிக்கிறாள். அவளின் விளையாட்டில் ஆர்வமடைந்த சிறுவர்களும் தங்களின் பட்டங்களது நூலை அறுத்து விட்டு கேமராக்களைக் கையிலெடுக்கின்றனர்.

27.

## ஜனாஸா அறிவித்தலொன்று

இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

கொழும்பு தேசிய சுவடிகூடத்தில் பாதுகாப்பிலிருப்பதாக நம்பப்படும் ஆவணமொன்றில் வசித்து வந்த தோழர் ஜோய் குவான் ஸாஹிப் காலமானார்.

இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னார், முன்பொருகாலம் கப்புக்கோல் பரிசாரியாராக பிரபல்யமடைந்திருந்தவரும் || தனது வம்சாவழியாகக் கைமாறிவந்த 'கப்புக்கோல் அறிதல் முறைமையை' ஏனையவர்களும் கற்றுக்கொள்ள வழிசெய்தவரும் || வெண்ணிறச் சீருடையணிந்து பரிசோதனை கூடத்திற்குள் புனைவு செய்துகொண்டிருந்தவர்களின் கதைகள் அதிகாரத்துடன் தலைதூக்கத் துவங்கி, ஏனையவர்களின் புனைகதைகள் புறந்தள்ளப் பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில், கப்புக்கோல் அறிதல் முறைக்காக போராடியவருமாவார்.

ஆவணத்தில் புழுதிபடிந்து கறையான்கள் அரிக்க, அவரும் அதன் ஒவ்வொரு பகுதிக்கும் இடமாறிக் கொண்டிருந்த வேளை ஓரிரு கறையான்கள் அவரிலும் வாய் வைத்ததில் வலிதாங்காமல் இறையடி சேர்ந்தார்.

*(இது அச்சு அசலாக, பள்ளிவாயலின் ஒலிபெருக்கியிலிருந்து குதிக்கும் மரண அறிவித்தல் இல்லை என்பதால் கப்புக்கோல் அறிதல் முறைமை பற்றி நானறிந்திருப்பதையும் தெரிவித்து விடுகிறேன்)*

வீட்டின் கொல்லைப் பக்கமாக அமைக்கப்படும் குடிலுக்குள் சொற்கள் சுயாதீனமாக உலவித்திரியும்படி செய்யப்பட்டு => எதனைப்பற்றி அறியவேண்டுமோ அதனை ஆழமாக மனதிலிருத்தி கண்கள் மூடிய நிலையில் ஏழு தடவைகள் கப்புக்கோல் எறியப்படும் *(3,5,17,21 என வெவ்வேறு தடவைகள் எறியும் முறையுமுண்டு)* => ஒவ்வொரு எறிதலுக்கும் கப்புக்குள் அகப்படும் சொற்கள் தெரிவு செய்யப்பட்டு, கப்புக்கோலை எறிந்தவரால் அச்சொற்கள் திக்ர்களாக

அவரின் மனதுக்குள் தியானித்தலுக்கு உட்படுத்தி ஒரு சம்பவக் கோர்வையை உருவாக்குவார்.

அக்கோர்வையானது, கப்புக்கோலை எறிந்தவர் உட்பட 5வர் கொண்ட குழுவில் (ஒருவர் அதிகம் விவாதிக்கக் கூடிய பெண்ணாக இருப்பர்) பொருட்கோடலுக்கு உட்படுத்தப்படும். 5வரும் உடன்படும் பொருட்கோடல் பகுதிகள் அவ்வளவாக அக்கறை கொள்ளப்படுவதில்லை. முரண்படும் பகுதிகளே குறித்த விடயம் பற்றிய அறிதல்களாகக் கொள்ளப்படும். இதுதான் (என்னால் தெரிந்துகொள்ள முடிந்த) கப்புக்கோல் அறிதல் முறை.

அவரின் பூதவுடல் கறையான்களால் அரிக்கப்பட்டு, இரண்டு கைவிரல்களும் தடித்த கவட்டிடை விரலும் மாத்திரமே எஞ் சியிருப்பதால், அன்னாரிற்கான ஆயிப் ஜனாஸா தொழுகை மஃரிப் பொழுதைத் தொடர்ந்து, கொழும்பு தேசிய சுவடிகூட முன்றலில் இடம்பெறும்.

இவ்வண்ணம், (அவரின் மரணம் குறித்து எவரும் கண்டுகொள்ளாததால்) அறிவிப்பாளராகிய நானேதான் தகவலை எத்திவைக்கிறேன்.

வஸ்ஸலாம்.

## 28.

### சொல்லிப் பார்த்தல்

தலையில் ஒரு கைவைத்து, முகத்தை மேல்நோக்கி, மறுகையை இடுப்பில் ஏந்தியிருக்கும் ஒரு பெண்ணின் உருவத்திற்கு, வெட்டப்பட்டிருந்த சாம்பல் நிறக் கடதாசியில் அவைகள் எழுதப்பட்டிருந்தன.

மார்புப் பகுதியில் வளைத்து எழுதப்பட்டிருந்ததைத் தான் முதலில் கண்கள் வளைந்தன. "இதனை வாசிப்பவர்கள் மீன்களாக முடிந்தது"

"சரியாக 260 வருடங்களுக்கு முன்பு இது நிகழ்ந்திருக்கிறது எனச் சொன்னால் நம்பவா போகிறீர்கள்.." – இப்படி மட்டும் சொன்னால் போதுமா..?வாசிப்பவர்களை நம்பவைக்க மேற்கொண்டு எந்தத் தகவல்களோ புள்ளிவிபரங்களோ ஏன் குறிப்பிட்டிருக்கவில்லை?

"இடி முழக்கத்துடன் மழை பெய்து ஓய்ந்திருந்தது. அனைத்தும் இப்பிரதிக்குள் நிகழ்ந்ததால் சொற்கள் நீரால் நிரம்பியிருக்கிறது" – மார்புப்பகுதி மேட்டர் ஏன் என இப்பொழுது புரிகிறது. கொஞ்ச நேரத்துக்கு மீன்களாக இருப்பதில் நமக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல தானே.

"பல வருடங்கள் தன்னை அர்ப்பணித்து எக்கச்சக்கமான பயணங்கள் செய்து தகவல்கள் திரட்டி ஆய்வுகள் மேற்கொண்டு அதனடியாக உண்மையை பதிவு செய்து கொண்டிருந்தவர்கள் – நீர் நிரம்பும் படியான சொற்களால் வடிவமைக்கப்பட்ட பிரதியை வீண் களியாட்டச் செயற்பாடாக வெறுத்து ஒதுக்கியதற்கு இப்படியும் சில காரணங்கள் இருக்கலாம் என எழுதிப் பார்க்கத் தோன்றுகிறது"

இடுப்பின் நெழிவில் கண்கள்
<இ>
<ற>
<ங்>
<கி>
காரணத்தில் விழுகின்றன>>>

"நீர் தளம்பும் பிரதிகளால் தங்கள் பிள்ளைகள் கவரப்பட்டு அங்கு குளிக்கச் செல்லலாம் – பலர் குளிக்க வர வாய்ப்புள்ளதால் தம் பிள்ளைகள் காதலுற்று, தாம் அசிங்கப்பட நேரலாம் – குளிப்பதற்கு தம்பிள்ளைகள் பிக்னி ஆடைகளைத் தெரிவு செய்யலாம் – அவ்வாடைகளைப் பல்தேசியக் கம்பனிகள் தயாரித்து இலாபம் பார்ப்பதால் உள்ளூர் உற்பத்தியும் பாழாகி கட்டிக்காத்துவந்த கலாசாரமும் சீரழியலாம்." – சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்ட போது, அய்ரோப்பிய மேட்டுக்குடியினர் தமது பெண்கள் காதலர்களோடு ஓடிப்போக உதவும் கருவியாக அதனைக் கண்டு நடுங்கினார்கள் தானே.

"பல அக்கப் போர்களின் பின், நீர் நிரம்பிய சொற்கள் பழகிப்போயின. அவைகளும் உண்மைகளாயின. பல கருவிகளுடன் சுழியோடிகள் ஆய்வுகள் மேற்கொள்ள, சொற்களின் விளிம்பில் அமர்ந்து நீரிற்குள் காலாட்டிய படி, நைசாக நீருக்கடியிலிருந்து கிழம்பிவரும் குமிழிகளின் சலனத்தையும் துல்லியமாகப் பதிவு செய்து இலக்கியப்பிரதிகளாக கொண்டாடினர்." – இலக்கியத்துக்கு வந்த சோதனை.!

"சொற்கள் நீராலானது. இவ்வுலகும் நீராலானது. நீரிலிருந்து உயிர்த்தவர்கள் நாம். நீரின்றி வாழ்வேது. இருப்பேது. என மூச்சடக்கி வசனம் பேசிக்கொண்டிருந்தார் அம்முக்கிய எலக்கியவாதி. அவரிடமும் சுற்றியிருந்தவர்களிடமும் ஒருவித பதட்டம். அக்காலப்பகுதியில் தான், சிறுவர்கள் ஊதி உருவாக்கும் சவர்க்கார முட்டைகளாய் சுயாதீனமாக அசையும் சொற்கொள் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு பிரதி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது" – ஓஹ்.. அதானா விசயம்.

ஹலோ மிஸ்டர், நீங்க திறந்து வைத்திருக்கிற புத்தகத்துக்கிடையில என்னய மிச்ச நாளா செருகி வெச்சிட்டாங்க. கொஞ்சம் வெளியேறி சுத்தித்திரியனும். எந்தப்பக்கமா வெளியே போகனும் என அப்பெண்ணுருவம் சடுதியாக அசைந்து பேசியதில் திடுக்குற்று ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நானும் வெளியதான் போறன், உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் கேன் ஐ ஜொய்ன் வித் யு?

பின்பகுதியிலும் எழுதப்பட்டிருக்கிறது. பிறகு வாசிக்கலாம்.

29.

## வரைபடத்தில் ஒரு யுவதி

கல்லூரியின் இறுதியாண்டுக் களப்பயிற்சிக்காகத் தெரிவு செய்த கிராமத்தை கூகிள் மெப்பில் லொகேட் செய்து அக்கிராமத்தின் வரைபடத்தை பிரின்ட் எடுத்தாகிவிட்டது. அவ்வரைபடத்தை, இரண்டு பகுதியாகப் பிரித்துப் பார்ப்பதற்கு ஏதுவாய் பிரதான வீதியொன்று ஊடறுத்துச் செல்கிறது. அப்பிரதான வீதியிலிருந்து வலது பக்கத்திற்குத் திரும்பி, வளைந்து நெழிந்து முடங்கிச் செல்லும் அவ்வூரின் குறுகலான பாதைகளுக்குள் பூராமல், சில்லறைக் கடைகள் – வீட்டுக் குடியிருப்புகள் – தோட்டங்கள் – தென்னை மரங்களுக்கு மேலாக பிரதானவீதியிலிருந்து ஜம் பண்ணிக் குதித்தால், அப்பகுதி வரைபடத்தின் முனையில் ஆர்ப்பரிக்கும் கடல் இருக்கும். நீச்சல் தெரியாதவர்கள் அப்படிக் குதிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

வரைபடத்தின் மறுபக்கத்தில் (பிரதான வீதியின் இடது பக்கம்) சிறிதளவான குடிப்பரம்பல்களே காணப்படுகின்றன. பிரதான வீதியிலிருந்து இப்பகுதி வரைபடத்தின் முனை வரை நீண்டு செல்லும் ஒரு நேர்பாதை இருக்கிறது. அதன் வழியாக 300 மீட்டர் கடந்து வரும் பொழுது, ஒரு குளம் அமைந்திருக்கும். சற்று முன் பெய்து முடித்த மழை, குளக்கரை மண் வாசத்தை ஏகத்திற்கு கிளப்பிவிட்டிருக்கிறது. வரைபடத்திற்கு மேலாக முகத்தை வைத்து எட்டிப்பார்க்கும் என் நாசிக்குள் குளக்கரையின் வீச்சம் நிரம்புகிறது. உங்களுக்கும் அப்படியாவெனக் கேட்டு வைக்கிறேன்.

எனது மூக்கு – நாசி – வாசம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாமல், குளக்கட்டில் குந்தியிருக்கும் ஒரு வாலிபனின் பக்கமாய் நழுவுகிறது மனம். அவன் கைகள் ஒரு கம்பினை குளத்தின் பக்கமாக நீட்டிப் பிடித்திருக்கிறது. ஒரு பூதக்கண்ணாடி இருந்தால், வரைபடத்தை zoom செய்து, அக்கம்பு முனையிலிருந்து குளத்திற்குள் குதித்திருக்கும் 'கிசிலை' அவதானிக்கலாம். பூதக்கண்ணாடி இல்லாமலே அவன் கையில் இருப்பது தூண்டில் தான்; அவன் மீன் பிடியில் ஈடுபடுகிறானென உங்களால் ஊகிக்க முடிகிறதல்லவா? இருந்தும், zoom செய்து பார்த்தால் இன்னொன்றும் தெரிய வரும்.

அங்கே குந்தியிருப்பது இளைஞன் அல்ல. யுவதி என்பது.

நீர்ப்பரப்பில் மிதக்கும் தூண்டில் 'மப்ளர்' மீது ஒரு கண்ணைப் பாரமேற்றி வைத்தவளின் மறு கண், அழிந்தழிந்து உருவாகும் நீரலைக் கோடுகளுக்கு இடையில் மிதக்கிறது. பாரமேற்றப்பட்ட கண் அமிழ்ந்து அசைய, தூண்டிலைச் சுண்டி இழுக்கிறாள். புற்தரையில் தொப்பென்று வந்து விழுகிறது சிதிலமான ஒரு கையுறை. அதில் சிக்கியிருந்த தூண்டில் முள்ளை விசனப்பட்டுக் களற்றி எடுக்கிறாள். அவளது விசனத்தின் இழுவையில் பிய்ந்து போகிறது கையுறையின் இரு விரல்கள்.

கரள் பிடித்த பேணி ஒன்றை அவளுடன் வைத்திருக்கிறாள். அதனுள்ளே, தூண்டில் முள்ளில் இரை பொத்தச் சேகரிக்கப்பட்ட மண்புழுக்கள் இருக்கின்றன. இரு துண்டு மண்புழுக்களை பேணிக்குள் கைவிட்டெடுத்து, தூண்டிலின் முள்ளில் குத்துவதைப் பார்க்கிறீர்கள். பிடுங்கி எடுக்கப்பட்ட இரு விரல்களைத்தான் முள்ளில் குத்துவதாக எனக்குத் தெரிகிறது. ஒன்று குடிகார அப்பாவின் விரல். மற்றது ஊர் விதானையாருடையது. புழு நெழியும் தூண்டில் முள்ளை குளத்திற்குள் எறிகிறாள். அம்முள்ளில் குத்துப்பட்ட வலியில் துடிக்கும் விரல்களிலிருந்து மெல்லக் கசிகிறது இரத்தம். மீண்டும் மப்ளரில் கண்ணைப் பாரமேற்றிக் காத்திருக்கிறாள். அவளுடன் சேர்ந்து நாமும் காத்திருக்கிறோம்.

காத்திருப்பின் மன அவசத்தைச் சாந்தப்படுத்த, தூண்டிலில் நெழியும் புழுவின் பக்கமாய் மீனொன்று வரப் பிரார்த்திக்கிறீர்கள். கசியும் இரத்தத்தை மோப்பம் பிடித்து 'பிராணாக்களில்' ஒன்று விரைந்து வரும். அசையும் புழுவை ரகசியமாகக் கடிக்கத் துவங்கும் மீனொன்றைக் கண்டு கொள்கிறீர்கள். அப்பிராணாவின் பற்கூர்மையில் விரல்களின் துடிப்பும் இரத்தக் கசிவும் அதிகரிக்கிறது. மப்ளரின் மீது வைத்திருந்த கண்ணை எடுத்து வேறெங்கோ வைத்திருந்தவளிடம், அமிழ்ந்து அசையும் மப்ளரைப் பார்க்கச் சொல்லிக் கத்துகிறீர்கள். மப்ளர் அசையும் நீர்ப்பரப்பு இரத்தக் கசிவில் சிவக்கிறது. அத்தருணம் பராக்கிலிருந்து மீண்டவள் தூண்டிலைச் சுண்டி இழுக்கிறாள். புற்தரையில் தொப்பென்று வந்து விழுகிறது சிதிலமான இன்னுமொரு கையுறை.

அவள் தனது இத்தூண்டில் ஆட்டத்தை அத்துடன் விட்டுவிடுவதாக இல்லை.

அவ்வரைபடத்தையும் ஏனைய கோப்புகளுடன் இணைத்து, அவ்வூரில் எனக்காக நியமிக்கப்பட்டிருக்கும் களப்பயிற்சி மேற்பார்வையாளரின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். வரைபடத்தில் குளமிருக்கும் பகுதி ஏன் சிவப்பாக இருக்கிறதென அவர் கேட்காமல் இருந்தால் சரி. ஏனென்றால், அவர்தான் நான் களப்பயிற்சிக்காகச் செல்லவிருக்கும் கிராமத்தின் விதானையும் கூட.


*30.*

## ஆசிரியர் வராத போது

அவர் வந்தால் எங்களிருவரையும் அழைப்பார். அப்போதே தெரிந்துவிடும், எங்களுக்கருகில் இருந்த மேசையில் பல வர்ணங்கள் பரவிச் சொட்டிக் கொண்டிருப்பது பற்றித்தான் விசாரிக்கப் போவார்.

யாரோ விட்டுச் சென்ற கனவுதான். என் மேசைக்கு அது எப்படி வந்ததென்று தேடி அலைவுற இருப்பதைச் சொல்லிக் காட்டுவதையும் விட, என் நினைவில் தட்டுப்படவிருக்கும் சிலரது சிந்தனையின் தெறிப்பில் மாறிக் கொண்டிருக்கப் போகும் அக்கனவின் நிறவடிவங்களையும் அதற்குள் நிகழ இருப்பவற்றினை அவதானித்துக் காட்டுவதையும் முதன்மைப்படுத்தலாம்.

அதற்குள் 5 வகை நிறக்கூட்டங்கள். ஒவ்வொரு கூட்டமும் பின்வரும் வடிவங்களின் சாயலை ஒத்திருக்கும்.



அக்கனவும் சிறிது நேரம் இவ்வடிவங்களொன்றின் உருவிலும் அதன் நிறத்திலும் பின், இன்னுமொரு கூட்டத்தின் நிறவடிவ சாயலுக்கும் உருமாறும். அப்பொழுது மற்றைய நிறக்கூட்டங்கள் பொலிவிழந்து மங்கலாகிவிடும். இல்லை மங்கலாக்கப்படும்.

ஒவ்வொரு கூட்டமும் தன் வடிவநிறத்தில் கனவினை மாற்றமடையச் செய்வதிலேயே குறியாகவிருக்கும். அதற்கான போட்டியும் மோதலும் தங்களின் நிறவடிவங்களை உயர்ந்ததாய்க் காட்சிப்படுத்தலுமென அவைகளுக்கு மத்தியில் நிகழ்ந்தேறிக் கொண்டிருக்கும். என்னிடமிருக்கும் கைகளில் ஒன்று அதற்குள் புதிய குழுவொன்றைக் கொண்டு வைக்கலாமென முயற்ச்சிக்கும் கணம்தான் தெரியவரும், அது அவ்வளவு இலகுவான விடயமல்ல என்பதும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள நியாயமான

வாய்ப்புகளின்றி அதற்குள் ஏற்கனவே மறைந்து கிடக்கும் வேறு குழுக்கள் பற்றியும்.

இந்தக் கதையெல்லாம் நான் கேட்கவில்லை. எப்படி மேசையில் வர்ணங்கள் பரவி சொட்டிக் கொண்டிருக்கிறது? யார் செய்தது? என்றே ஆசிரியர் முறைத்துக் கொண்டு கேட்பார்.

முன்னால் அமர்ந்தபடி என்பக்கம் கவனித்துக் கொண்டிருக்கப் போகும் இவள், தானும் பார்க்கட்டுமா எனக் கேட்க, அவளை அனுமதித்ததும் என் நினைவில் சிந்தித்துக் கொண்டிருந்தவர்களை அமைதிப்படுத்திவிட்டு, சும்மா பார்க்க மட்டும் செய்வேன். அடுத்த சில நொடிகளில் அத்தனை நிறக்கூட்டங்களும் ஒன்றுடன் ஒன்று உரசியபடி சுயாதீனமாக அசைய, புதுப்புது நிறங்களும் வடிவங்களும் உருவாகும். வர்ணஜாலங்களில் ஓவியமாகத் தடங்காட்டத் துவங்கும் கனவும் தன் வடிவ எல்லையினை உடைத்து மேசையில் பரவும். மிகுந்த பிரமிப்புடன் எப்படி உன்னால் இப்படியெல்லாம் செய்ய முடிந்ததெனக் கேட்க, நிறக்கூட்டங்களின் மீது திணிக்கப்பட்டிருந்த சில சிந்தனைகளை அவள் அகற்ற முனைந்ததாகச் சொல்வாள்.

மேசையில் வரையப்பட்டிருந்த உருவமொன்றினையே கனவெனப் பெயரிட்டு அதில் எங்களின் செயலினால் நிகழ இருக்கின்றவற்றை உங்களிடம் சொல்லிப் பார்க்கிறேன். இதனையெல்லாம் ஆசிரியர் நம்பச் சிரமப்பட்டால் எனது வர்ணப்பெட்டியை இவள்தான் மேசையில் கொட்டிவிட்டாள் எனச் சொல்லலாம். அது சரி, எப்படி வர்ணங்கள் திரவமாகச் சொட்டிக் கொண்டிருக்கின்றன? உன்னிடம் கலர் பென்சில்கள்தானே இருக்கின்றன என ஆசிரியர் மடக்கிக் கேட்டால் அதற்கென்றும் இன்னொரு சம்பவம் என்னிடம் உருவாகலாம்.

பின்னுரை

## இந்தப் பிரதிகளை என்ன பெயர் சொல்லி அழைப்பது?

*றியாஸ் குரானா*

கதைகளுக்குள் வசிக்கிறோம். கதைகளால் வசிக்கிறோம் என்றாகிற போது கதைகள் சொல்லவும் கேட்கவுமான செயலில் ஆர்வம் மிகுந்தபடியேயுள்ளது. பலவகையான கதைகளும், கதைசொல்லுதலும் ஊடாடும் மொழிவெளியில் உருவாகிவந்த பல புலங்கள் நம் நினைவுக்கு உடனே வருகின்றன. வரலாறு, பாலியல், அதிகாரம், சமூகம், பண்பாடு இப்படி பல பரப்புக்களில் கதைகள் உருவாகியும், மறைந்தும் பெருகியபடியே இருக்கின்றன.

மொழியின் பண்டையச் செயலில், தனித்த ஒரு பகுதியாக இலக்கியம் என்ற பெருங்கதையொன்று உண்டு என நம்பிக்கொண்டிருக்கும் நிலையில், அங்கும் கதைகளின் இடம் முக்கியமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது.

இலக்கியத்தின் மிக அண்மைக்கால கண்டுபிடிப்பாக நாவல் இருப்பினும், சினமா என்ற வடிவம் இதன் முக்கியத்துவத்தை பின் தள்ளிவிட்டிருப்பது உலகளவில் நிகழந்த ஒன்று. கதை சொல்லலின் வகைமைகள் மிக குறைவாக இருந்ததும், பல வகை கதைசொல்லல் வகைமைகள் உருவாக்கப்படாமலிருந்ததும் சினமா மேலுக்குவரக் காரணமானவற்றில் முக்கியமானது. இதை உணர்ந்த இலக்கியச் செயற்பாட்டாளர்களும், ஏலவே பேணப்பட்ட கதைசொல்லலின் மாதிரிகளால் சலிப்படைந்தவர்களும் கதைசொல்லலின் வகைமைகளை பெருக்கும் சோதனை எழுத்துக்களை உருவாக்கத் தொடங்கினர். அதனடியாக பல வகைமைகள் பெருகத்தொடங்கின.

தமிழின் விரிந்த பரப்பிற்குள் கதை சொல்லுதலின் வகைமைகள் பரிசோதிக்கப்பட்டாலும் அதை தொடருவதில் மந்தமான ஒரு நிலையே இருக்கிறது. மீண்டும் எதார்த்த வாதத்திற்கும், மரபான கதைசொல்லுதலுக்கும் திரும்பிவிட்டோம் என ஆங்காங்கே சிலர் கூறிக்கொள்வதையும் கேட்க முடிகிறது. எனினும், மரபான ஒரு இலக்கியச் செயலுக்கு திரும்பியிருக்கிறோமா? அல்லது அப்படி நம்புவதற்கு முயற்சிக்கிறோமா என்பதை மீள ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கிறது.

காதை சொல்லுதலிலும், கருத்தியல் நிலைகளிலும், ஒரு இலக்கியப் பிரதிக்கான வடிவத்தை புதிதாக உருவாக்கும் பிரக்ஞையிலும் பலர் எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஈழத்தைப் பொறுத்தமட்டில், ராகவன், இ.சு.முரளிதரன், திசேரா, மிஹாத், என பலரும் கதைசொல்லுதலின் அசாத்தியங்களையும், பிரதியைக் கட்டமைப்பதில் புது வழிமுறைகளையும் செய்துதான் இருக்கிறார்கள்.

ஆயினும், கதைசொல்லுதல் என அழைக்க முடியாத ஒரு திசையில், பிக்ஷன் மேக்கிங் என்று கருதத்தக்க வகையிலும், முற்றிலும் புதிதொரு வாசிப்பு முறையை கோரி நிற்கும் இலக்கியப் பிக்ஷன்களை தோழர் இமாம் அத்னான் உருவாக்கிக்கொண்டிருக்கிறார். அப்படி அவர் உருவாக்கிய பிரதிகள் கதை சொல்லுதலின் அசாத்தியங்களையும், பிதிக் கட்டமைப்பின் பன்மையான வழிகளையும் மாத்திரம் கொண்டிருக்கவில்லை. கருத்தியல் தளத்திலும் விழிப்புணர்வோடு வாசகர்களை நோக்கி பேசத்தொடங்குகின்றன.

◉◉

"சூறத்துல் நானும் என் எதிரத்தலும்" என்ற பிரதி கதையாடலின் ஒரு உச்சம் எனக்கொள்ளலாம். அல்குர்ஆனின் நெரெடிவ் ஃபோமை பின்பற்றி இப்பிரதி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இப்படியான ஒரு வடிவமைப்பே இஸ்லாமிய மத அரசியலில் செலுத்தும் மாற்றுக் கதையாடல்கள்தான்.

இப்பிரதியானது தன்னுள் புனைவு நிகழ்த்துகையாக கதையாடும் மாற்றுக் கருத்தியல்கள் அதிகம் அக்கறை கொள்ளப்பட வேண்டியவை: மனிதர்கள் உருவக்கிப் பேணும் மதிப்பீடுகளை தொந்தரவு செய்தல், அப்படி தொந்தரவு செய்வதற்கும், அத்தகைய மதிப்பீடுகளை மாற்றி யோசிப்பதற்கும், அத்தகைய சிந்திப்பை நிகழ்த்திக் காட்டுவதற்கும் ஆதாரமாக அல்லது அதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு மொழி எப்படி அர்த்தங்களைப் பெருக்குகிறது என்பதை கதையாடுகிறது. எனவேதான் இப்பிரதி மொழியின் மீது சத்தியம் செய்து தாவுகிறது. (அல்குர்ஆன் பல இடங்களில் ஒன்றின் மீது சத்தியம் செய்து சில விசயங்களை முன்வைக்கும். எதன் மீது சத்தியம் செய்யப்படுகிறதோ அதுவே அதனைத் தொடர்ந்து சொல்லப்படும் விசயங்களுக்கான ஆதாரம். அத்தாட்சி)

வறலாறு நெடுகிலும் சமூக இயங்குதலில் படிந்துகிடக்கும்

மனித மய்ய சிந்தினையை (anthropocentrism) இப்பிரதி இடையீடு செய்து பார்க்கிறது: தன்னை மாத்திரமே தன்னிலைகளாக (subjectivity) அல்லது செயலூக்கமுள்ள (ACTIVE) ஒன்றாக கதையாடி வரும் மனிதன், மற்றமைகளை தனக்கான பயன்பாட்டுப் பொருளாக (object) அல்லது செயலூக்கமற்ற (PASSIVE) விசயமாக; தன்னால் அறியப்படும் பொருள்களாக; தன்னால் அர்த்தம் வழங்கப்படும் பொருளாகவே கதையாடல்களைப் புனைந்து வந்திருக்கிறான். இப்பிரதியில் ஒரு பறவை கற்பனை செய்கிறது. அக்கற்பனையில் கவிதை சொல்லி மரமாகிறான். அதன் கற்பனையை இயல்பாக ஏற்கவும் லயிக்கவும் செய்கிறான். மற்றமைகள் மீது மனிதன் கவிழ்த்தி வைத்திருக்கும் மதிப்பீடுகள் கலைக்கப்படுகிறது. மதிப்பீடு என்பது அடிப்படையில் வன்முறைக்கு உதவி செய்யும் ஒரு வழிமுறை என்பதை குறித்துக்காட்டுகிறது.

◉◉

"அறிவிப்பாளரின் தடங்கலுக்கு வருந்துகிறோம்" என்ற ஒரு பிக்ஷன் இருக்கிறது. ஒரு அறிவிப்பளர் மைதானப் போட்டி நிகழ்ச்சியை மைக்கில் விவரணை செய்யும் நெரெடிவ் ஃபோமை பின்பற்றி பிரதி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நெரெடிவ் ஃபொமே வினோத விளையாட்டாய் பிரதிக்குள் ஆர்வம் கொள்ளச் செய்கிறது.

மைதானத்தில் போட்டி நிகழ்வது எங்கென்றால், குகை இடிபாடுகளுக்கு இடையில் கண்டுபிடித்துக் கொண்டுவரப்பட்ட ஒரு புராதன கதைப்பிரதிக்குள் என்பதும், அக்கதைப்பிரதியைச் சூழ்ந்திருக்கும் பார்வையாளர்கள் ஆராவாரம் செய்வது, போட்டியாளர்கள் கதைக்குள் இறங்கி விளையாடுவது, அடிபட்டு விபத்துக்குள்ளாகும் போட்டியாளருக்கு உதவுவதற்காக முதலுதவிக் குழு ஏழாம் பந்திக்குள் அவசரமாக புகுவது என விரியும் கதை சொல்லல்கள்: புதுவகை மெட்டா ஃபிக்சன் உத்தியாக வாசிக்க வேண்டிய புதிய திசையை நம்மிடம் உருவாக்கிவிடுகிறது.

அத்தைகய புனைவுச் சொல்லல்களில் (FICTIONAL NARATION) எதார்த்தத்திற்கும் புனைவுக்கும் இடையிலான பிரிகோடுகள் அழிக்கப்பட்டு, இரண்டும் இயல்பாக கலந்திருப்பதை பார்க்கலாம். அத்தகைய கலப்பை ஆச்சரிய அதிசய விசயமாக பிரதி கையாளவில்லை.

கதையாடும் அரசியலை நோக்காகக் கொண்டு இப்பிரதியுடன் இடைவினை (active interaction) புரியும் பொழுது: வரலாற்று ஆய்வு கூட எப்படி ஒரு இன அடையாள மேன்மைப் படுத்தலுக்கானதாக பயன்படுத்தப்படுகிறது, தாம் கொண்டிருக்கும் வரலாற்றின் தொன்மையின் ஆழம் தங்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் விசயமாக பார்க்கப்படுவதை, அதற்காக வரலாற்றுத் தொன்மையை – ஆழத்தை உருவாக்கச் செய்யும் பைத்தியகாரத்தனங்களைப் பேசுவதனை அவதானிக்கலாம். அதனூடாக, எம்மை நுண்தளத்தில் ஆக்கிரமித்திருக்கும் செங்குத்தான நேர்கோட்டுச் சிந்தனை அமைப்பை நோண்டிப் பார்க்கிறது.

பொது வெளி – மய்யநீரோட்ட உரையாடலில், ஒரு நிகழ்வின் பின்புல அதிகார அரசியல் லாவகமாக மறைக்கப்பட்டிருக்கும். அத்தகைய உள்ளரசியல் பற்றிய உரையாடல்கள் சிறு அமைப்புகளில், கொஞ்சம் ரகசியமாகவே நிகழும். இப்பிரதியில் அப்போட்டி நிகழ்ச்சியின் உள்ளரசியல் பற்றிய உரையாடல், மின்சாரம் தடைப்பட்ட பொழுதொன்றில் இருவருக்கிடையில் ரகசியமாக நிகழ்கிறது. அவ்வரசியலை தெரிந்து கொண்ட அறிவிப்பாளர், அது பற்றிய சிறு வார்த்தையை பேசியதுமே அவர் காணாமல் ஆக்கப்படுகிறார்.

◎◎

“ஜெமோசுவின் அடையாளம் அல்லது மீண்டும் கத்த முடியாத ம்ம்மெஹ்ஹ்...” என்றொரு பிக்ஷன். அடையாள அரசியல் குறித்த பின்னவீன நிலைப்பாட்டினை முன்வைத்து கட்டமைக்கப்பட்ட புனைவு. எந்த அடையாளமும் எவருக்கும் நிரந்தரமற்றது. தொடர்ச்சியாக மாற்றமுறக்கூடியது. மீண்டும்

நிகழ்த்த முடியாதது என்பவற்றை புனைவு நிகழ்த்துகையாக செய்துகாட்டும் பிரதி.

கட்டமைக்கப்பட்டிருக்கும் அல்லது தரப்பட்டிருக்கும் அடையாளங்கள், மதிப்பீடுகளாக மாற்றமுற்று நிறுவனமயப்பட்டிருப்பதையும் (institutionalized) அதனூடாக, குறித்த குழுமத்தை மேன்மைப்படுத்தவும் (supiriority) பிறதுகளை விளிம்புக்கு வெளித் தள்ளிவிடவும், குறித்த அடையாளங்களை என்றைக்குமானதாக பேணமுனைவதன் அபத்தத்தையும் பேசுகிறது. இப்படியான அடையாளத்தை வைத்து செய்யப்படும் சமூகவெளி அரசியல் கதையாடல்களை முன்வைக்கிறது.

இப்பிரதியில் மூன்றாம் நபராக இருந்து பிரதிச் சம்பவங்களை நெரேட் செய்யும் கதைசொல்லி, ஒரு கட்டத்தில் இன்னொரு கதா உயிரியாக பிரதிக்குள் இயங்குகிறார். மாட்டிக் கொள்ளப் பொக இருந்த ஆட்டினை தப்பிக்கச் செய்கிறார். பிரதிக்குள் துயரமாக மாறிவிடக்கூடிய சூழலை திசைதிருப்பிவிடுகிறார்.

◉◉

“ஜனாஸா அறிவித்தலொன்று” என இன்னுமொரு அற்புதமான பிக்ஷன். பள்ளிவாயலில் அறிவிக்கப்படும் மரண அறிவித்தல் வடிவத்தினை நெரெடிவ் ஃபோமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பிரதி.

ஜோய் குவான் சாகிப் என்பவர் முன்பொரு காலம் வாழ்ந்து மரணித்தவர். அவர் மரணித்தாலும் அவர் பற்றிய குறிப்புகள் அடங்கிய ஆவணமொன்றிருந்திருக்கிறது. அதிகாரத்திற்கு எதிராக அவர் செய்த குரல் அந்த ஆவணத்திலிருந்தும் இல்லாமல் போகிறது. அதனையே கதை சொல்லி பிரதிக்குள் அவரின் மரணமாக அறிவிக்கிறார்.

பல்வேறு வகைப்பட்ட அறிதல் முறைமைகள் நிலவிய நம் சமூக வெளியில் அவைகளெல்லாம் காயடிப்பு செய்யப்பட்டு,

விஞ்ஞான அணுகுமுறை தன்னையே உண்மையான – நியாயமான அறிதல் முறையாக நிறுவிக் கொண்டிருக்கிறது. தொன்மம், நம்பிக்கை, புராணம் என நமக்கு மத்தியில் புளங்கிய அறிதல் முறைகள் 'மூட' எனும் முன்னொட்டால் விளிம்புக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. மொத்த அறிதலுக்குமான முறைமையாக விஞ்ஞானம் மாறியிருக்கிறது. நம் கீழைத்தேய சுதேச பண்பாட்டில் பரிசாரியார்மார்கள் இருந்திருக்கிறார்கள். இன்னும் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென பிரத்தியேகமான அறிதல் முறைகளை கொண்டிருக்கிறார்கள். தேசிக்காயை உறுட்டி, தேங்காகை பிழந்து, கைரேகையைப் பார்த்து, முட்டையை வைத்து என பல அறிதல் முறைகளை கைக் கொள்கிறார்கள். சமூக வெளியில் நிலவிய – நிலவுகின்ற அறிதல் முறைமையின் பன்மைத் தன்மையைப் பேசுவதாகவும், அதிகாரத்தில் இருக்கும் அறிதல் முறைமையை தொந்தரவு செய்வதாகவும் கதையாடல்களைக் கிளைத்து நீளச் செய்கிறது இப்பிரதி

◉◉

"ஆசிரியர் வராதபோது" என்று ஒரு பிக்ஷன். வராத ஆசிரியர் வந்தால் என.. இன்னும் நடக்காத சம்பவங்களை எதிர்காலத்தில் நடக்க இருப்பதாக, எதிர்கால வினைமுற்றில் இப்பிரதி நெரேட் செய்யப்படுகிறது.

கதை சொல்லியான மாணவனின் கற்பனையில் உருவாகும் சம்பவத்தில், சக மாணவியும் தனது கற்பனையை செலுத்தி கதைசொல்லியின் புனைவுச் சம்பவத்தில் இடையீடு செய்கிறாள். இவர்கள் இருவருக்கும் இடையில் நிகழும் கற்பனை அவர்கள் இருவரையும் தாண்டி ஆசிரியருக்கும் அக்கற்பனைச் சம்பவத்தின் விளைவு தென்படுகிறது. கற்பனை எதார்த்ததிற்குள் வழிந்தோடுகிறது.

ஒவ்வொரு குழுமமும் இறுக்கமாகப் பற்றிப் பிடித்துப் பேணும் கருத்தமைவுகள், சிந்திப்பு நிலைப்பாடுகள் தங்களை அதிகாரத்தில் நிறுவவும், மற்றமைகளை விளிம்புக்குத்

தள்ளவும், செங்குத்தான சமூக ஒழுங்கமைப்பை மேற்கொண்டு, குழுத் தூய்மை வாதம் பேணவும் செய்கிறதென பேசுவதோடு.. அத்தகைய கருத்தமைவுகளை சிந்தனைகளை அகற்ற நிகழும் வர்ண ஜாலங்களென விரிகிறது பிரதி.

◉◉

இவை இந்த புனைபிரதிகள் தொடர்பில் மேலோட்டமாக கூறக்கூடிய விசயங்கள் மாத்திரமே, ஆனால், எப்படியான அம்சங்களை தன்னுள்ளே கொண்டிருக்கிறது, அது எப்படி புனைபிரதியாகஉருப்பெறுகிறது,அதற்குகையாளப்பட்டிருக்கும் புனைவுத்திகள் எவை எவை, என்று விரிவாக பேச நமக்கு அதிக வாய்ப்பை இந்தப் பிரதிகள் தன்னுள்ளே கொண்டிருக்கின்றன.

சரி, இந்தப் பிரதிகளை இலக்கியக் குடும்பத்திற்குள் இதுவரையும் அடையாளப்படுத்தப்படும் எந்த பெயரை குறித்து அழைப்பது? கதை என்று சொல்வதா? இல்லை கவிதை என்று சொல்வதா? தோழர் அத்னான் ஒரு வசதிக்கா Short Fiction அல்லது flash fiction என அழைக்கலாம், அல்லது நீங்கள் கவிதைக் கதை என அழைக்கலாம், எப்படி அழைத்தாலும் அந்த விளிப்பிற்குள் வரமறுக்கும் அம்சங்களை இப்பிரதிகள் தன்னுள்ளே கொண்டிருக்கிறது என்பதுதான் விசயம்.

மேலும் ஒரு விசயம், இங்கே கூறவேண்டிய ஒரு முக்கியமான விசயம் இருக்கிறது. இந்த பிரதிகளை நான் கவிதைச் சம்பவங்களாகவே கருதுகிறேன். கவிதைச் சம்பவங்கள் என்றால் என்ன? அப்படி ஏதும் இலக்கிய வரலாற்றில் தனியாக பேசப்பட்டதாகஅமைந்திருக்கிறதாஎனயோசிக்கலாம்.. அப்படி யோசிப்பதற்கு முன், அது குறித்து நானே சொல்லிவிடுவதுதான் நல்லது..

கவிதைச் சம்பவம் (Poetry event)

உண்மையில் நான் இந்த இடத்தில் மிகச் சிக்கலான ஒரு விசயத்தை எதிர்கொள்கிறேன். ஏனென்றால், எங்கு தேடியும்

நீங்கள் இப்படி ஒரு கலைச்சொல்லைக் கண்டுபிடிக்க முடியாது என்பதுதான். கவிதைக்குள் சம்பவங்கள், கவிதைக் கற்பனை, படிமம், கவிதைக்கதை, என பல விசயங்களைஅறிந்திருந்தாலும், அறியக் கிடைத்தாலும், இந்த கவிதைச் சம்பவம் என்பதை எப்படி முன்வைப்பது, அதை ஒரு கலைச்சொல்லாக ஆக்க எந்தவகையான உழைப்பை செய்வது போன்ற, கேள்விகளும் தடுமாற்றங்களும் என்னிடம் இருக்கின்றன. முடியுமான வரை விபரிக்க முனைகிறேன். விரிவாக அல்ல, சுருக்கமாக. இதை நீங்கள் இரண்டு திசைகளில் புரிந்துகொள்ளலாம். அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள கலைச்சொற்களில் இல்லை. ஆகவே, ஒரு போலியான முன்வைப்பு என்றும், அல்லது, கவிதை குறித்த புரிதலில் உருவாகும் ஒரு புதிய உள்ளடக்கம் என்றும், அது உங்கள் தேர்வு சார்ந்ததே.. அதற்காக எனது முயற்சியை நான் கைவிட வேண்டியதில்லை. அம்முயற்சி தோல்வியடையலாம். அல்லது, அதிசயிக்கத்தக்க வகையில் அது வெற்றியடைந்துவிடலாம்.

கவிதை என்பது வார்த்தைகளாலான ஒரு கட்டமைப்பு. கவிதை என்பது ஒரு சம்பவம். அல்லது இரண்டையும் இணைத்து சிந்திக்கின்ற ஒரு செயல்.

கவிதை ஒரு சம்பவத்தை விபரிக்க முயல்கின்றது. ஒரு சம்பவமாக இருக்க முயல்கின்றது. இவை குறித்த சிறிய முன்வைப்பை, ஜோனதன் கல்லர், தனது "இலக்கியக் கோட்பாடு ஒரு சுருக்கமான அறிமுகம் என்ற நூலில் செய்கிறார். அவர், தன்னுணர்ச்சிக் கவிதைக்கும், கதையாடல் கவிதைக்குமிடையிலான உறவையும், முரணையும் தொட்டுக் காட்டுவதோடு, கோட்பாட்டாளர்கள் சிக்கலுக்குள்ளாகும் இடமாகவும் இதை வாசிக்கிறார். நான் இந்த முன்வைப்புக்களை மறுக்கவோ, ஏற்கவோ முடிகிற வழிகளில் சிந்திக்க முற்படவில்லை. அவைகள் அனைத்தையும் உள்ளெடுத்ததாகவும், அவைகளில் ஒரு தளமாற்றத்தை கற்பனை செய்வதுமாகவே இங்கு சிந்திக்கிறேன்.

எதார்த்தவாதம், புற உலகை அக்கறைகொண்டது.

உணர்ச்சிமையவாதம் தனிமனித அகத்தை அக்கறைகொண்டது. நவீனத்துவம், தனிமனித பிரக்ஞையினூடாக புறஉலகை அனுகுவதை பரிந்துரைத்தது, நான் இவைகளுக்கிடையிலான ஒரு கூட்டுறவுச் சாத்தியத்தை சந்திக்க எத்தணிக்கிறேன் என்று மேலோட்டமாகச் சொல்லிவிடலாம். கவிதைக்கும், தனிமனித அகம், புறஉலகு, மற்றும் தனிமனித பிரக்ஞையுடனான இந்தக் கூட்டுறவை, புனைவு சார்ந்த உறவாக பார்க்க முற்படுகிறேன்.

புறச்சூழலை பிரதிபலித்தல் என்றோ, அல்லது தனிமனித சுயத்தின் தனித்த உருவாக்கம் என்றோ, அல்லது மொழி தனது இயல்பாய் அர்தத்தை உருவாக்கும் வழிகளில் உருப்பெறும் பிரதியாக்கமாகவோ பார்க்காமல், தனது அகச்சாற்றுகளால் உற்பதி செய்யும் புனைவாக கருதுகிறேன். புறச் சூழலின் ஆவணம் அல்ல கவிதை என சிந்திக்கிறேன். அதே நேரம் ஒன்றின் நிறைவூட்டல் என்றும் பார்க்கவில்லை.

கவிஞனின் குறித்த தருணத்திற்கான ஒரு கூற்று, கவிதை வரலாற்றில் ஒரு சம்பவம், அத்தோடு வாசகனின் எதிர்பார்ப்போடு பின்னப்பட்டுள்ள ஒரு புரிதல் முறை என்ற விசயங்களைஒருங்கிணைக்கும்புனைவுரீதியிலானஒருசெயலாக கவிதையைப் பார்க்கிறேன். புறச்சூழலிலோ, அல்லது தத்துவ மற்றும் அழகியல் வரலாற்றிலோ – இருக்கும் சம்பவங்களுக்கு நிகரான ஒரு புனைவுச் சம்பவமாக பார்க்கிறேன். தத்துவார்த்த அறிவியல் செயற்பாடுகளை சிக்கலுக்குள்ளாக்க முனையும், ஒரு புனைவுரீதியிலான முன்வைப்பாக பார்க்கிறேன். தத்துவங்கள் மற்றும், அரசியல் கருத்தாக்கங்கள், அழகியல் தருணங்கள் போன்வற்றை பின்பற்றி நிகழ்த்தப்படும் வார்த்தைகளாலான கட்டமைப்பாகவோ, சம்பவமாகவோ நான் பார்க்கவில்லை. அவைகளோடு போட்டியிடத்தக்க வகையிலும், குழப்பும் வகையிலுமான எழுத்துச் செயற்பாடாகவே பார்க்கிறேன்.

அறிவியல் மற்றும் தத்துவங்களுக்கு நிகரான – அதற்குப் பதிலீடான சிந்தனை முறையாக கவிதையைப் பார்க்கிறேன். கவிதை தனது பிரதியின் எல்லைக்குள்ளாக நிகழ்த்தும் அர்த்த உருவாக்கங்கள், அதற்காக கைக்கொள்ளும் வழிமுறைகள்,

அதற்காக மொழியைப் பயன்படுத்தும் அசாரணமானதும், அபத்தம் எனக் கருதத்தக்கதுமான பரிந்துரைகள் போன்றவற்றை கொண்ட ஒரு கூட்டுச் செயலுக்கு எவைகள் தேவை என ஒரு பிரதி கருதுகிறதோ அவைகளை ஒருங்கிணைக்கும் நிகழ் தருணங்களேயே கவிதைச் சம்பவம் என கருதுகிறேன்.

புறச்சூழலிலோ, அல்லது, தத்துவார்த்தப் பிரதிகளிலோ, அரசியல் மற்றும், அறிவியல் பிரதிகளிலோ பயன்படுத்தும் சம்பவத்திற்கு நிகரான பொருளைத் தராமலும், அச் சம்பவங்களிலிருந்து முற்றிலும் வேறான தன்மையைக் கொண்டிருப்பதுதான சம்பவங்களையே கவிதைச் சம்பவம் என்கிறேன். இதை இன்னும் இப்படி புரிந்துகொள்ள வழிகள் உண்டு எனக்கருதுகிறேன். ஒரு பிரதியை கவிதையாக ஆக்குவதற்கு கற்பனைசெய்வதையும், சிந்திப்பதையும் உள்ளடக்கிய ஒரு முயற்சியில் இந்தக் கவிதைச் சம்பவம் என்பது அடையாளப்படுத்தக்கூடியதாக அமையும் என்று நினைக்கிறேன். அதாவது, கலைப்பொருட்காட்சி கூடமொன்றில், ஒரு பிஸ்கட் பெட்டியை கொண்டுபோய் வைப்பதைப் போன்றது இது. இதை கலைப்பொருள் அல்ல என ஒரேயடியாக நிராகரித்துவிடவும் கூடும். அடுத்த புறத்தில், ஒரு பிஸ்கட் பெட்டி எப்படி கலைப்பொருளாக ஆகுகிறது என சிந்திக்கப்படவும் வாய்ப்பைத் தருவதாக இருக்கும். அந்த வாய்ப்பைத் தந்த செயல்பாடு என்ன? ஒரு பிஸ்கட் பெட்டியை கலைக்கூடத்திற்குள் கொண்டுவந்து வைத்ததுதான். யார் கொண்டுவந்தார்? எப்படியான கோணத்தில் உள்ளே வைத்திருக்கிறார்? அங்கே வைப்பதற்கு எப்படி அனுமதியைப் பெற்றார்? அனுமதி வழங்கியதற்கு பொருள் நிறைந்த ஏதும் காரணங்கள் இருக்கமுடியுமா? என்பதை உள்ளடக்கியதுதான், கலைக்கூடத்திற்குள் "பிஸ்கட் பெட்டி" வைக்கப்பட்டதற்கான சம்பவம்.

கவிதைப் பிரதியினுள் மறைந்திருக்கும் சம்பவமும் இப்படியானதே. கூற்றுக்களால் உருவாகும் சம்பவத்தை பற்றி நான் குறிப்பிடவில்லை. அது கவிதைக்குள் இருக்கும் சம்பவமாக ஏற்கனவே இருக்கிறது. அந்தந் சம்பவத்தை அல்லது

அதைப்போன்ற பல சம்பவங்களை, அல்லது ஒரு செய்தியில் வருவதுபோன்ற சம்பவத்தை கவிதைப் பிரதி என நம்பும் ஒன்றுக்குள் கொண்டு வந்து வைத்திருப்பது தொடர்பிலான புனைவு சார்ந்த விசாரணையையும் உள்ளடக்கியதுதான் நான் சொல்லும் கவிதைச் சம்பவம்.

ஒரு அரசியல் சம்பவம் இருக்கிறது. அந்தச் சம்பவத்தை கவிதைப் பிரதி பிரதிபலிக்கிறது எனில் அது கவிதையில் மீளுருவாக்கம் செய்யப்படும் சம்பவம். ஒரு தத்துவம் சார் சம்பவம் அல்லது கருதுகோள் இருக்கிறது, அதை தனிமனித பிரக்ஞையின் படிமமாக கவிதையில் கொண்டுவரப்படுகிறது எனில், அது ஒரு எதிரொலியாக மாறிவிடுகிறது. ஆனால், கவிதைச் சம்பவம் என்பது பிறிதொன்றின் பிரதிபலிப்பாகவோ, எதிரொலியாகவோ அல்லாது இருப்பதை அக்கறைகொள்ளும் நிலையை பரிந்துரைப்பதுதான் கவிதைச் சம்பவம். கவிதை பிற துறைகளுக்கு சேவகம் செய்யும் ஒரு பணியாளரைப்போல் செயற்படுவதல்ல என்பதை அக்கறைகொள்வதுதான் கவிதைச் சம்பவம் ஆகும்.

ஆப்பிள் பழம் என்ற ஒன்றிருக்கிறது. அதன் பயன்பாடு மற்றும் ஏனைய விசயங்கள் இருக்கின்றன. மீண்டும் கவிதைப் பிரதி தனக்குள் நடித்துக்காட்டுவததை இது குறிக்கவில்லை. கவிதைப் பிரதி தனக்குள், தனது எல்லைக்குட்பட்ட வகையில் ஆப்பிள் பழமொன்றை உருவாக்கவில்லை. புனைகிறது. அதற்கான அகச்சாற்றுகளை பிரதியினுள்ளாகவே தடங்காட்டுகிறது. இப்போது, ஆப்பிள் பழம் சார்ந்த விசயங்களை , பிரதியினுள் தேட முடியாது. புறத்திலுள்ள ஆப்பிளை பிரதிபலித்திருப்பதாகவும் கருதமுடியாது. இரண்டு வெவ்வேறு ஆப்பிள்கள் இருக்கின்றன என்றே கருத முடியும். இந்த இரண்டு ஆப்பிள்களும் அடிப்படையில் சமத்துவமானது. அத்தோடு வித்தியாசமானது. ஒன்றோடு ஒன்று போட்டியிடத்தக்கது. ஆப்பிள் என நீங்கள் அறிந்திருக்கும் எந்த விசயங்களோடும், அதன் பயன்பாடுகளோடும், கவிதையினுள் புனைத்திருக்கும் ஆப்பிள் ஒத்துவராமல் இருக்கலாம். அதற்காக அது ஆப்பிள் அல்ல என்று சொல்லிவிட முடியாது. நீங்கள் ஆப்பிள் என

புரிந்துகொண்டிருக்கும் ஆப்பிளில் இருந்து அது கொண்டிருக்கும் வேறுபாடு மற்றும் பண்புகள், அதன் பயன்காளால்தான் கவிதை புனைந்திருக்கும் "ஆப்பிள்" காய்த்திருக்கிறது.

இப்படிச் பேசிக்கொண்டிருக்கிறேனே... ஆம், இவைகளைச் செய்யத்தூண்டும் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு இயங்கும், விசயங்களின் கூட்டிணைவுதான் கவிதைச் சம்பவம் என்பது என கருதுகிறேன்.

இந்த கவிதைச் சம்பவங்களை புரிந்துகொள்ள உதவக்கூடிய புனைபிரதிகளை தோழர் இமாம் அத்னான் பிக்ஸனாக உங்கள் முன் கொண்டு வந்திருப்பதுதான் இந்தத் தொகுப்பு. அப்படியான ஒரு தொகுப்பொன்று ஈழத்திலிருந்து தமிழ்ச்சூழலுக்கு வருவதையிட்டு சந்தோசமாக உள்ளது. மேலும் தொடர வாழத்துக்கள் தோழர் இமாம் அத்னான்.



கதைசொல்லுதல் என அழைக்க முடியாத ஒரு திசையில், ஃபிக்‌ஷன் மேக்கிங் என்று கருதத்தக்க வகையிலும், முற்றிலும் புதியதொரு வாசிப்பு முறையைக் கோரி நிற்கும் இலக்கியப் ஃபிக்‌ஷன்களை தோழர் இமாம் அத்னான் உருவாக்கிக்கொண்டிருக்கிறார். அப்படி அவர் உருவாக்கிய பிரதிகள் கதைசொல்லுதலின் அசாத்தியங்களையும், பிரதிக் கட்டமைப்பின் பன்மையான வழிகளையும் மாத்திரம் கொண்டிருக்கவில்லை. கருத்தியல் தளத்திலும் விழிப்புணர்வோடு வாசகர்களை நோக்கி பேசத்தொடங்குகின்றன.

- றியாஸ் குரானா

www.yaavarum.com

www.be4books.com